விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 193 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 15 வெள்ளிக்கிழமை (30.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# ஊழியர் சேமலாப நிதியில் கைவைக்கப் போவதில்லை

## வங்கிக் கட்டமைப்புக்களும் பாதுகாக்கப்படும்

## மத்திய வங்கி ஆளுநர்



Dr. P Nandalal Weerasinghe

*(கொழும்பு)* உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின்போது வங்கிக் கட்டமைப்புக்கள் பாதுகாக்கப்படும். அத்துடன் ஊழியர் சேமலாப நிதியத்தில் அரசாங்கம் கைவைக்கப் போவதில்லை என இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏற்கெனவே 50%க்கும் அதிக மான வரி ஊடாக திறைசேரிக்கும், பொருளாதாரத்திற்கும் பங்களிப்புச் செய்யும் வங் 15

## பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவ வசதி படைத்தவர்கள் முன்வர வேண்டும்

### யாழில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(யாழ்ப்பாணம்)

பட்டினியால் வாடும் மக்களை வாழ வைப்பதற்கு கைகளிலே பணமுள்ள முதலாளிகள் சிந்திக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று கோண்டாவிலில் புதிதாக அமைக்கப்பட்ட மக்கள் நலன்பேணும் அமைப்பின் கட்டடத் தொகுதித் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டிலும் வருமான வேறுபாட்டை இல்லாமல் செய்தால்தான் வறுமைக்கோட்டுக்குள் உள்ள மக்களைக் குறைக்க முடியும்.

நான் ஜனாதிபதியாக 15

### எதிர்வரும் பட்ஜெட்டில்

## அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில்பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள ஜனாதிபதி 15

## யாழில் கோர விபத்து; இருவர் ஸ்தலத்தில் பலி



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் பகுதிக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். 15

### மக்களே அவதானம்!

## மலேரியா நோய்க் கிருமி யாழிலும் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் மீண்டும் மலேரியா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மலேரியா எதிர்ப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

மலேரியா ஒழிக்கப்பட்ட நாடாக இலங்கை அறியப்பட்டாலும் நாட்டில் மீண்டும் மலேரியா பரவும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. 15

## முல்லையில் மனித எச்சங்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் பெண் போராளிகளின் உடைகளுடன் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு- 15

## 10 ஆயிரம் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

### அரசாங்கம்

(கொழும்பு)

உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றுகின்ற 10 ஆயிரத்து 355 ஊழியர்களின் சேவைகளை நிரந்தரமாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக 15

### முல்லையைச் சேர்ந்த இருவர்

## மர்மமான முறையில் கட்டாரில் உயிரிழப்பு

(டோகா)

முல்லைத்தீவில் இருந்து கட்டாருக்கு வேலைக்காக சென்ற இரு இளைஞர்கள் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கட்டாரில் குறித்த இரு இளைஞர்களும் தங்கியிருந்த இடத்திலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு நாட்களாக 15

## புத்தூரில் வீடு புகுந்து தாக்குதலில் ஈடுபட்ட

### 31 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

புத்தூரில் இரண்டு வீடுகளுக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டவர்களில் 25 பெண்கள் உட்பட 31 பேர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் பலரை தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - புத்தூரில் இளை 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## 37 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் - 2023
## பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்

பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு கல்வியாண்டு 2019/2020 இல் பட்டம் பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய, பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான பீடங்களையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடங்களையும் சேர்ந்த தூய, பிரயோக விஞ்ஞானப்பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❖ **தகைமை:-**

எதிர்வரும் 37ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம், விவசாயம், பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் நான்கு வருட சிறப்புப்பட்டம் அளிக்கப்படவிருக்கும், முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்கள்.

❖ **விண்ணப்பப் படிவங்களை கீழ்க்காணும் ஒரு முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.**

1. உதவிப்பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. பிரதிப் பதிவாளர், பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள் கிளை, வவுனியாப் பல்கலைக்கழகம், வவுனியா.
3. பல்கலைக்கழக இணையத்தளம் : **www.jfn.ac.lk**

❖ **விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும், ஏனைய சான்றிதழ்களுடன் உதவிப்பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்" என்னும் முகவரிக்கு 07.07.2023ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் **"பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கத்திற்கான விண்ணப்பப்படிவம்"** எனக் குறிப்பிடவும்.

❖ **முடிவுத் திகதி : 07.07.2023 (வெள்ளிக்கிழமை)**

❖ **முக்கிய குறிப்பு:**

- ஏற்கனவே 6ம் ,7ம் மற்றும் 8ம் திகதி ஐப்பசி மாதம் 2022இல் நடைபெற்ற 36 ஆவது பட்டமளிப்பு விழாவின் போது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவை இல்லை.
- சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காதவையும், தெளிவற்றவையும், பூரணப்படுத்தப்படாதவையும் மற்றும் முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுபவையுமான விண்ணப்பங்கள் யாவும் கருத்திற் கொள்ளப்படமாட்டா.

(C-6843) பதிவாளர்

# மண்டைதீவு தில்லேஸ்வரத்தில் நாளை சங்காபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலய சங்காபிஷேகம் நாளை சனிக்கிழமை இடம்பெறும்.

சிவகாமவல்லி அம்பிகை சமேத ஸ்ரீமத் தில்லேஸ்வரப் பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம் இடம்பெற்று விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.

வீணாகான குருபீடாதிபதி சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்களின் ஆசியுடன் சிவஸ்ரீ தி.சிவதர்சன் குருக்கள் பூசை வழிபாடுகளை நடத்தி வைப்பார். (4)

# மண்டைதீவு கண்ணகை அம்மன் ஊர்வலம் இன்று

(மண்டைதீவு)

மண்டைதீவு பூம்புகார் கண்ணகை அம்மனின் கிராம ஊர்வலம் இன்று வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகும்.

தொடர்ந்து எதிர்வரும் திங்கட்கிழமை 3ஆம் திகதி இரவு பொங்கல், தீக்குளிப்பு, வழிவெட்டல் ஆகிய வழிபாடுகள் இடம்பெறும். (4)


**Hybrid International Hub (pvt) ltd Jaffna**

**கனடா, லண்டன், யப்பான், மலேசியா அவுஸ்ரேலியா, இந்தியா ஆகிய நாடுகளுக்கான விசா விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து தரப்படுவதுடன் விசாக்களும் பெற்றுத் தரப்படும்.** (C-6835)

**Hybrid International Hub (pvt) ltd Jaffna**
**077 815 5920, 021 222 1265**


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் திருமதி செல்வம் ஜெயக்குமாரி (ஜெயா)



தோற்றம் 10.10.1966 மறைவு 31.05.2023

மாதம் ஒன்று ஓடி மறைந்திட்டம்மா
உன் சிரித்த முகத்தையும் பொறுமையான
வார்த்தையையும் பார்த்து
அன்பின் உறைவிடமே
இறைபக்தியில் இருப்பிரே
அன்பு மிகு மகளாய் சகோதரியாய்
பாசமிகு மனைவியாக, மருமகளாக
நேசமுள்ள லக்ஸ்மினியின் அம்மாவாக
மைத்துனியாக சுற்றம் சூழ மகிழ்வித்து
கண்ணின் மணியாக காத்திருந்த தெய்வம்
எங்கு சென்றீர்கள்?
பாதை தெரிந்தால் பாய்ந்தோடி வந்திடுவோம்
ஒழுங்கை தெரிந்தால் ஓடோடி வந்திடுவோம்
மாதங்கள் ஓடி மறையும்
உனது நினைவுகள்
எம்முடனே வாழும்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல.11, முத்தமிழ் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 222 8017

ஆறாத்துயருடன் என்றும்
உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை விரைவில் மீண்டெழும்

## உலகப் பொருளாதார பேரவை நம்பிக்கை

**(பீஜிங்)**

**பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுக் கூடிய இயலுமை இலங்கைக்கு உள்ளதாக உலக பொருளாதாரப் பேரவையின் தலைவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

சீன வெளிவிவகார அமைச்சர் சின் காங்கின் உத்தியோக பூர்வ அழைப்பின்பேரில் 7 நாட்கள் உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொண்டு கடந்த சனிக்கிழமை சீனா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அங்கு பல்வேறு உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றார்.

இதன் ஓரங்கமாக சர்வதேச பொருளாதாரக் கட்டமைப்புக் களில் ஒன்றான உலக பொருளாதாரப் பேரவையின் தலைவர் போர்ஜ் ப்ரெண்டியை சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலவரம் மற்றும் பொருளாதார மீட்சி செயன் முறை என்பன தொடர்பாக இதன்போது கலந்துரையாடப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நெருக்கடியிலிருந்து மீண்டெழக்கூடிய இலங்கையின் இயலுமை தொடர்பாக உலக பொருளாதாரப் பேரவையின் தலைவர் போர்ஜ் ப்ரெண்டி இதன்போது நம்பிக்கை வெளியிட்டதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதேபோன்று பீஜிங்கில் வசிக்கும் இலங்கையர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ள அமைச்சர் அலி சப்ரி, அவர்களை வர்த்தகத்துறைசார் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும், இலங்கையின் நல்லெண்ணத் தூதுவர்களாக செயற்படுமாறும் ஊக்குவித்துள்ளார். (நி-5)

# 1 அலகு மின்சாரத்தை கூட பயன்படுத்தாமல் 4 லட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள்

(கொழும்பு)

மின் கட்டண அதிகரிப்பின் பின்னர் ஓர் அலகு மின்சாரத்தைக் கூட பயன்படுத்தாத குடும்பங்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 50 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

ஓர் அலகு மின்சாரத்தைக் கூட பயன்படுத்தாத குடும்பங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 3 இலட்சமாக காணப் பட்டதுடன் தற்போது 4 இலட்சத்து 50 ஆயிரமாக அதிகரித் துள்ளது என மின்சார நுகர்வோர் சங்கத்தின் தலைவர் சஞ்ஜீவ தம்மிக்க தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபை, மின்சாரத்துக்கான கேள்விக்கும் மேலதிகமாக கடந்த 2022 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மற்றும் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதங்களில் மின்கட்டணத்தை அதிகரித்தது.

இலங்கை மின்சாரசபை இது குறித்த யோசனையை முன் வைத்த போது, அது சாத்திய மற்றது எனத்தெரிவித்து அதனை நிராகரித்தோம். எனினும் எமது குரலுக்கு மின்சார சபை செவி சாய்க்கவில்லை. தற்போது தாங்கள் செய்தது தவறு என்று உணர்ந்துள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மின்கட்டண அதிகரிப்பால் மின்பாவனையாளர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்திருந்தனர். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. மின்நுகர்வு 20 சதவீதத்தினால் குறைவடைந்தது.

அப்போது ஒரு யுனிட் மின்சாரத்தை கூட பயன்படுத்தாத 3 இலட்சம் குடும்பங்கள் இருந்தன. அந்த எண்ணிக்கை தற்போது 4 இலட்சத்து 50 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், இலங்கை மின்சார சபைக்கே தற்போது கணிசமான நட்டம் ஏற்பட்டுள்ளது. அதனால் தான் மின் கட்டண அதிகரிப்பை நாம் எதிர்த்தோம்.

முன்மொழியப்பட்ட கட்டணத் திருத்தத்தை அங்கீகரிப்பதில் மின் நுகர்வோர் மற்றும் பல்வேறு தொடர்புடைய தரப்பினரால் முன்வைக்கப்படும் நியாயத்தை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கருத்தில் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

## சிதறு தேங்காய் உடைத்து

# நல்லூர் கந்தசுவாமி கோயிலில் வழிபாடு செய்த முன்னாள் ஜனாதிபதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிதறு தேங்காய் அடித்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நேற்று காலை நல்லூர் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டார். சைவ பண்பாட்டுடன் வேட்டி அணிந்து வந்த மைத்திரிபால சிறிசேன சிதறு தேங்காய் அடித்து வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன, மைத்திரிபால சிறிசேனவின் புதல்வர் தஹாம் சிறிசேன உள்ளிட்ட பலரும்கலந்து கொண்டனர். (நி-5-6-33)






# மணிவிழா வாழ்த்து

திரு.
குட்டித்தம்பி முருகையா



யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் எம்முடன் 13 வருடங்களுக்கு மேலாக சிறப்பாகப் பணியாற்றி அண்மையில் தனது 60 ஆவது அகவையில் ஓய்வு பெற்றுச் சென்ற திரு.குட்டித்தம்பி முருகையா அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் உடல், உள ஆரோக்கியத்துடனும் இருக்க் இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர் :- ஊழியர் நலன்புரிச்சங்கம், பொதுசன நூலகம், யாழ்ப்பாணம். (16131)

# சேவை நலன் பாராட்டு



திருமதி.
வசந்தி சிவராஜா
( SLTS - I, பகுதித்தலைவர், B.A. (Hons), PGDE)

சேவைக்காலம்
1993.01.13-2006.12.31
யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்
2007.01.01-2015.12.31
யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்
2016.01.01-2023.05.31
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

மாணாக்கர் கல்வி கண் திறந்திட
அயராது உழைத்த ஆசிரியரின்
அளப்பரிய சேவையை உளமார வாழ்த்துகின்றோம்

(c-6839)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

කම්කරු හා විදේශ රැකියා අමාත්‍යාංශය
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
Ministry of Labour and Foreign Employment

உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்
உள்ளடங்கலாக பல்வேறு சேவைகள் மற்றும் வசதிகள் உடன்

மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 5.00 மணிவரை உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் உள்ளடங்கலாக பல்வேறு சேவைகள் அதன் பின் பிரபல இலங்கை இசைக்குழுக்களுடன் இந்தியபாடகர்கள் கலந்து சிறப்பிக்கும் இசை நிகழ்ச்சி பி.ப 7.00 மணி தொடக்கம்

GLOCAL
க்ளோகல் ..பெயார் FAIR 2023
வடக்கின் ஒளிமயம்



2023 ஜுலை 15 மற்றும் 16 ஆம் திகதிகளில்
முற்றவெளி திடலில், யாழ்ப்பாணம்.

ஊடக அனுசரணை:- வலம்புரி
பதிவு செய்வதற்கான இணையத்தளம்: WWW.GLOCAL.LK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் தடவையாக நியூஸிலாந்தை வெற்றி கொண்ட இலங்கை மகளிர் அணி




காலி சர்வதேச விளையாட்டரங்கில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற நியூஸிலாந்துக்கு எதிரான முதலாவது மகளிர் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 9 விக்கெட்டுகளால் இலங்கை வெற்றி பெற்றது.

நியூஸிலாந்துக்கு எதிராக அனைத்து வகையான மகளிர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் இலங்கை ஈட்டிய முதலாவது வெற்றி இதுவாகும்.

காலை பெய்த மழை காரணமாக அணிக்கு 28 ஓவர்களாக மட்டுப் படுத்தப்பட்டு நடத்தப்பட்டது.


முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த நியூஸிலாந்து 28 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அசத்துவார் என எதிர்பார்க்கப்பட்ட சுசி பேட்ஸ் 28 ஓட்டங்களை மாத்திரம் பெற்று காவிஷா டில்ஹாரியினால் ஆட்டம் இழக்கச் செய்யப்பட்டார்.

பந்துவீச்சில் காவிஷா டில்ஹாரி 26 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சுகந்திகா குமாரி 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் இனோக்கா ரணவீர 41 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (6)

ஹொங்காங்கில் நடைபெற்ற ஆசியா பசுபிக் ஆபிரிக்கா பளுதூக்கும் போட்டியில் இலங்கை சார்பாக கலந்து கொண்ட யாழ். தென்மராட்சி பகுதியை சேர்ந்த சற்குணராசா புசாந்தன், ஸ்குவாட் முறையில் 325 கிலோவை தூக்கி 3 ஆம் இடம்பெற்று வெண்கல பதக்கத்தினை பெற்றுள்ளார்.

(படம்:-சிவசாந்தன்)



# மைதானத்துக்குள் நுழைந்த நபர் அலேக்காக தூக்கி சென்ற பேர்ஸ்டோவ்



ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக பேட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

இந்த தொடரில் முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று 1-0 என தொடரில் முன்னிலையில் உள்ளது. இந்நிலையில் இரு அணிகள் இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நேற்று தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து கப்டன் பென் ஸ்டோக்ஸ் முதலில் பந்துவீசுவதாக அறிவித்தார். இதையடுத்து அவுஸ்திரேலிய அணி முதலில் பட்டிங் செய்தது. முதல் ஓவரை ஆண்டர்சன் வீசினார்.

இந்த ஓவர் முடிந்த நிலையில் மைதானத்திற்கு வெளியே இருந்து சில போராட்டக்காரர்கள் மைதானத்துக்குள் நுழைந்து வார்னரை நோக்கி ஓடினர்.

அப்போது பென் ஸ்டோக்ஸ் மற்றும் பேர்ஸ்டோவ் அவர்களை தடுத்து நிறுத்தினர்.

பேர்ஸ்டோவ் ஒரு நபரை குண்டுக்கட்டாக தூக்கி மைதானத்துக்கு வெளியே கொண்டு சென்று விட்டு வந்தார். அதன் பிறகு தனது டீஷர்ட் மற்றும் கையுறை ஆகியவை வர்ண பொடியால் அழுக்கான நிலையில் டிரெஸிங் ரூம் சென்று மாற்றி விட்டு மீண்டும் வந்தமையால் ஆட்டம் சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2864

### கம்ஷி

**மிக்ஸியை அரைக்க மட்டும் பயன்படுத்தாமல்**



**வீட்டில் உள்ளவர்களை சீக்கிரம் எழுப்பவும் பயன்படுத்தப்படுவது பெண்களின் புத்திசாலித்தனம்**

### நிவேதா

மனைவி : நான் எல்லாம் காலேஜ் படிக்கும் போது மாறுவேட போட்டியில அரக்கி வேஷம் போட்டதுக்கு எனக்கு இரண்டாம் பரிசு கொடுத்தாங்க

கணவன் : அரக்கி வேஷம் போடாம சும்மாவே போயிருந்தா முதல் பரிசயே கொடுத்து இருப்பாங்க.

மனைவி : ஹலோ 108 ஆ ..?

### தர்சன்

**இரண்டெழுத்து கவிதை மீன்...**
**மூன்றெழுத்து கவிதை இறால்...**
**நான்கெழுத்து கவிதை மட்டன்...**
**பரவாயில்லை நமக்கும் கவிதை வருதுது...**



### ஜெமிலன்

**மைன்ட் வாய்ஸ்: எதுக்கு இவ அழுக்கு தண்ணிய டைனிங் டேபுள் மேல வச்சிருக்கா... ம்ம் புரியல்லயே**



**மனைவி: என்னங்க ரசம் சாப்பிட்டிங்களா, நல்லா இருக்கா? ஆத்தி... ஜஸ்ட் மிஸ் டா...**

### நிரஞ்சலா

**என்னடா நம்ம சேகரு எப்போ துபாய்கு போனான்னு யோசிச்சிட்டு இருந்தேன்...**



**உத்து பாத்தா உருளைகிழங்கு கூடைக்கு முன்னாடி நின்னுட்டு இருக்கான்..**

### சயந்தன்

**பழமொழி:- அழகு இருக்கிற இடத்தில தான் ஆபத்து அதிகமா இருக்கும்...**



**அப்போ எனக்கு வாற எல்லா பிரச்சினைகளுக்கும் காரணம் நான் அழகா இருக்கிறது தானா...**

**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய உயர்ஸ்தானிகர் நியமனம்



(லண்டன்)

இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய உயர்ஸ்தானிகராக ராஜதந்திரியான அன்ட்ரூட் பேட்ரிட்க் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை உயர்ஸ்தானிகராக பதவி வகித்த சாரா ஹல்டன், தமது பதவிக் காலம் முடிந்து நாடு திரும்பும் நிலையிலேயே பேட்ரிட்க் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அன்ட்ரூட் பெட்ரிக் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் தமது பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)


**ICT CLASSES**

Tamil & English Medium

**Grade: 6,7,8,9 and 10,11**

**Physical or Online Classes**

- *Theory (ICT Text Book & Work Book)*
- *Practical on Computer*
- *Past Papers*
- *Unit Examination*
- *Model Papers*

*Home Visites Individual Classes*

Contact : V.V.Moorthy(ICT & IT)

Tel: 0777 469 282

(இ)



Handahana ராசி சுப பலன்

விசேட சீட்டிழுப்பு



சீட்டிழுப்பு ஜூன் 30

டிக்கட் 1 பரிசுகள் 7

ஒரு இலட்சம் மற்றும் இரண்டு இலட்சம் பணப் பரிசுகள் ஏராளம்

50 டிக்கட்டுகள் அல்லது அதற்கு அதிகமாக கொள்வனவு செய்ய

அழையுங்கள்: 0114607080

உங்கள் வாசலுக்கே அதிர்ஷ்டத்தைக் கொண்டு வர நாம் தயார்...

அடுத்த அதிர்ஷ்டசாலி நீங்களா?

(சி-2038)

NLB | தேசிய லொத்தர்

வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்


## இராசிபலன்

30.06.2023
ஆனி 15, வெள்ளிக்கிழமை
துவாதசி முன்னிரவு 10.40 மணிவரை

விசாகம் பிற்பகல் 1.51 மணிவரை
சுபநேரம் -5.56-7.26 மணிவரை
இராகுகாலம்-10.26-11.56 மணிவரை

சந்திராஷ்டமம்- ரேவதி, அச்சுவினி.


வளவன்




**மேஷம்** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு.



**கடகம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.



**துலாம்** உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பதவிகளும், பொறுப்புக்களும் வந்து சேரலாம், எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம்.



**மகரம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




**ரிஷபம்** எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.



**சிம்மம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.



**விருச்சிகம்** குடும்பத்தில் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**கும்பம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**மிதுனம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், மாற்றுக் கருத்துடையோர் மனம்மாறுவர், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.



**கன்னி** நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**தனுசு** திட்டமிட்ட காரியமொன்றில் சில திருப்பங்கள் ஏற்படலாம், எதிர்பாராத இடமாற்றங்கள் ஏற்படலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.



**மீனம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கடலில் மூழ்கிப்போனாலும் கடலில் மூழ்கிப் போகாதே.



இலங்கை மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீடம் சமூகநலம் பண்பாட்டு அறப்பணி மையத்தின் ஏற்பாட்டில் 34 ஆவது ஆண்டில் நடத்தப்படும் இரண்டாவது மேல் மருவத்தூர் ஆதிபராசக்தியின் சமுதாயப்பணி பக்திநெறியின் ஆன்மிக மாநாடு நேற்று யாழ்.வீரசிங்கமண்டபத்தில் இடம்பெற்றது.
(படங்கள்:கஜிந்தன்)

## பெண்களின் படங்களை தவறாக சித்தரித்து

# முகநூலில் பதிவிட்ட இளைஞர்கள் ஊர் மக்களால் நையப்புடைப்பு



(யாழ்ப்பாணம்)

பெண்களின் படங்களை தவறாக சித்தரித்து சமூக ஊடங்களில் வெளியிட்ட இரு இளைஞர்களின் வீடுகளுக்குள் புகுந்து குறித்த இளைஞர்கள் மீது தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. புத்தூர் பகுதியில் நேற்று முன்தினம்புதன் கிழமை இரவு 11.30 மணியளவில் இடம் பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

புத்தூர் பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் வசிக்கும் பெண்களின் படங்களை கணனி வரைகலை (கிராஃபிக்ஸ்) மூலம் தவறாக மாற்றம் செய்து, அதனை சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளனர்.

இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஊர் மக்கள் இணைந்து முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்நிலையில் இரு இளைஞர்களே அவ்வாறு பெண்களின் படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்தனர் என குற்றம் சாட்டி, அந்த இளைஞர்களின் வீடுகளுக்குள் புகுந்து குறித்த இளைஞர்கள் மீது மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தியுள்ளதுடன் வீட்டினுள் இருந்த பெறுமதியான பொருட்களை அடித்து உடைத்தும் வீட்டின் முன் நின்ற வாகனங்களை அடித்து உடைத்து ,அவற்றுக்கு தீயும் வைத்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற அச்சுவேலி பொலிஸார் தாக்குதலில் காயமடைந்த இளைஞர்களை அங்கிருந்து மீட்டு , வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முயன்ற போது , பொலிஸாருடன் முரண்பட்டு , பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையால் அதில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்ததையடுத்து நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸார் வான் நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர். அதனை அடுத்து அங்கு கூடியிருந்த ஊர்மக்கள் காயமடைந்த இரு இளைஞர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோரை மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-33)

# வெடுக்குநாறிமலை விவகாரம்

## ஆட்சேபனைகளை முன்வைக்க அவகாசம்

## நீதிமன்றம் அறிவிப்பு

(வவுனியா)

வவுனியா-வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பான வழக்கில், பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபனைகளை முன்வைக்க, உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் தொடக்கம் ஆறு வார கால அவகாசம்வழங்கியுள்ளது.

அதேநேரம், தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குறித்த அடிப்படை உரிமை மனுவை, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

வவுனியா- வெடுக்குநாறி மலையில், சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டமை தொடர்பில், விசாரணை நடத்த தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு எதிராக உத்தரவிடுமாறு கோரி கல்கமுவே சங்கபோதி தேரர் மற்றும் பிரிகேடியர் அத்துல டி சில்வா உள்ளிட்டோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனு, நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, முர்து பெர்னாண்டோ மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் நேற்று முன்தினம் அழைக்கப்பட்ட போது, குறித்த விசாரணைக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)



வடமராட்சி சக்கோட்டை கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இராணுவத்தின் நாலாவது சிங்க ரெஜிமென்ற் பிரிவு பருத்தித்துறை பிரதேச சபையினர் மற்றும் பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டு சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.
(படம்- மகாலிங்கம்)





அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும்

இசை வேள்வி -2023

இரண்டாம் நாள் நிகழ்வுகள்

காலம் - 30.06.2023 வெள்ளி
நேரம் - மாலை 5.00 மணி
இடம் - நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம்

திருநாள் மங்கலம்

மங்கல விளக்கேற்றல்
திரு.எஸ். சிவகுமார் தம்பதியர்
(பணிப்பாளர். யூ.கே.ஈ.பிறைவேட் லிமிட்டட்)
கடவுள் வாழ்த்து
செல்வி.ஸகிஷ்ணா ரவிச்சந்திரன்
தலைமையுரை
திரு.த.ஜெயசீலன்
(யாழ்.மாநகரசபை ஆணையாளர்)

இசையரங்கு

பாட்டு - செல்வி லோ.சாய்லக்ஷ்மி
வயலின் - வாசுகி சுவாமிநாதன் சர்மா
மிருதங்கம் - பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மா
கஞ்சிரா - சு.அனந்தநாராயணன் சர்மா




இசைப் பேரரங்கு

பாட்டு - நெய்வேலி ஆர்.சந்தானகோபாலன்
வயலின் - வி.எஸ்.கோகுல்


# துவிச்சக்கர வண்டி திருடிய நபர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தை பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் துவிச்சக்கரவண்டி திருட்டில் ஈடுபட்ட நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொதுச்சந்தையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியை மேற்படி சந்தேக நபர் திருடிக் கொண்டு சென்ற வேளையில் மடக்கிப் பிடித்த பொதுமக்கள் அவரை சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5-6-30)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 62 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கி யாழ். பிராந்தியமும் இலங்கை வங்கி ஊழியர் சங்கமும் இணைந்து நடத்தும் இரத்த தான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழ்மை காலை 8 மணி தொடக்கம் மதியம் 1 மணிவரை யாழ். ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் இடம்பெறவுள்ளது என இலங்கை வங்கி ஊழியர் சங்கம் மக்கள் வங்கிக் கிளையின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் - பதவி வெற்றிடம்

## எமது சங்கத்தின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**1. பதவி :-கிராமிய வங்கி முகாமையாளர். (205/09)**

சம்பளஅளவுத்திட்டம் :- 20200-250X10-260X10-25300 (02/2022 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கிராமிய வங்கிப்பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.
கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கிராமிய வங்கி பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றில் எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் நிதிச் செயற்பாட்டுடன் தொடர்புடைய கூட்டுறவு நிறுவனமொன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக /கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**2. பதவி :-கிளைமேற்பார்வையாளர் (207/10) ஆண்கள்**

சம்பளஅளவுத்திட்டம் :- 19745-225X10-250X10-24495 (02/2022 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர்/ கிளைமேற்பார்வையாளர்/கிளைமுகாமையாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.
கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**3. பதவி :- வெளிக்கள உத்தியோகத்தர் (210/10) (கிராமியவங்கி)**

சம்பளஅளவுத்திட்டம் :- 19745-225X10-250X10-24495 (02/2022 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அ. கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்ட பதவியில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவியில்/ எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.
கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவியில்/எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனம் ஒன்றில் விவசாயம்/நுண்நிதி தொடர்பான 06 மாதங்களுக்கு குறையாத கற்கைநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் சம்மந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.
க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் சம்மந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**4. பதவி :- கணக்குப் பதிவாளர் (215/09)**

சம்பளஅளவுத்திட்டம் :- 20200-250X10-260X10-25300 (02/2022 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அ. கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்குப் பதிவாளர் /வெளிக்கள உத்தியோகத்தர்/காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் கணக்குப்பதிவாளர்/வெளிக்கள உத்தியோகத்தர் /எழுதுநர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

ஆ. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்குச் சமனான தகைமை/ மாகாணக் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தால் (NICP) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட/வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவன்மொன்றில் கணக்கியல் துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**5. பதவி :- விற்பனை உதவியாளர் (308/15)**

சம்பளஅளவுத்திட்டம் :- 17435-145X10-160X10-20485 (02/2022 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அ. கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர்/ எரிபொருள் நிரப்புநர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.
கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் ப்தவியில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி/ கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

**6. பதவி :- சாரதி (312/13)**

சம்பளஅளவுத்திட்டம் :- 18360-160X10-170X10-21660 (02/2022 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அ. 05 ஆம் தரக்கல்விச் சான்றிதழுடன் பேருந்து/ லொறி /பெட்டியுடன் கூடிய உழவுஇயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**7. பதவி :-தொழிலாளி. (318/17)**

சம்பளஅளவுத்திட்டம் :- 16515-130X10-145X10-19265 (02/2022 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. 05ஆம் தர கல்விச்சான்றிதழுடன் சிறந்த தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**8. பதவி :- உற்பத்தி உதவியாளர் (326/16)**

சம்பளஅளவுத்திட்டம் :- 16975-135X10-150X10-19825 (02/2022 இன்படி)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவு ஊ்ழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் தரம் 08 கல்விச் சான்றிதழ்.

**பொதுவானது**

வயது எல்லை 18-45 இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கு வயது எல்லை இல்லை. சங்கத்தினூடாகவே விண்ணப்பிக்க வேண்டும்.
விண்ணப்பதாரி முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை அனுப்புதல்**

சங்கத்தலைமை அலுவலகத்தில் ரூபா 20.00 செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்துடன் பிறப்புச்சான்றிதழ். கல்வித்தகைமைச் சான்றிதழ். அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ். தொழிற்தகைமைச்சான்றிதழ் ஏனைய தகைமைகள் இருப்பின் அச்சான்றிதழ்களின் நிழற் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 15.07.2023 ஆம் திகதிக்கு முன்னதாக **தலைவர், புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம், குழந்தையேசு கோயில் வீதி, மந்துவில், புதுக்குடியிருப்பு.** என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தாபலிலோ அனுப்பி வைத்தல் வேண்டும்.கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் 'பதவி விண்ணப்பப் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம் புதுக்குடியிருப்பு.**

**021 - 206 1696**

(C-6840)

# மனித உரிமை-தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு புதிய தலைவர்கள் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல்கள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுக்களிற்கு புதிய தலைவர்களை நியமித்துள்ளார்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.டி.பி தெகிதெனிய இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (நி-5)

# எரிவாயுவிற்கு தட்டுப்பாடில்லை

## லா•ஃப்ஸ் காஸ் நிறுவனம்

(கொழும்பு)

நாட்டில் சமையல் எரிவாயுவிற்கு தட்டுப்பாடு நிலவுவதாக பல்வேறு வதந்திகள் பரப்பப்பட்டாலும் சந்தையில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படவில்லை என லாஃப்ஸ் காஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுஅதிகாரி [illegible] தெரிவித்துள்ளார்.

ஒரு மாதத்திற்கு போதுமான சமையல் எரிவாயுக்கள் சேமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் தேவையான எரிவாயுக்கள் உள்ளதாகவும் அத்துடன் நாடளாவிய ரீதியில் அதனை விநியோகித்து வருவதாகவும் உள்நாட்டு நுகர்வோர். ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கான எரிவாயு சிலிண்டர்களை. சிரமமின்றி கொள்வனவு செய்ய முடியும் என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 155

# உழைப்பே உயர்வு தரும்



மரம் சார்ந்த தொழில் தெரிந்த நபர் ஒருவர் வேலை தேடி வீதி வீதியாய் நடக்க ஆரம்பித்தார். அன்று மாலையே ஒரு மரக்கடையில் அவருக்கு வேலை ஒன்று கிடைத்தது. அந்த முதலாளியிடம்வேலை கேட்ட நான்,மிகவும்கடினமான உழைப்பாளி எனக்கு ஒரு வேலையை கொடுங்கள். நான் அதை சிறப்பாக செய்து முடிப்பேன் என்று உறுதி கூறியே அந்த வேலையை பெற்றான்.

அந்த முதலாளி அவனுக்கு கொடுத்த வேலையோ காட்டுக்கு சென்று மரம் வெட்டும் வேலை.சும்மா சொல்லி விட முடியாது.முதல் நாள் கிடைத்த வேலையை அந்த நபர் மிகவும் அற்புதமாக செய்தார்.அங்கு மரம் வெட்டும் அனைத்து தொழிலாளிகளை விடவும் சில மரங்கள் அதிகமாக வெட்டி சாதனைகள் பல புரிந்தார்.

அங்கு வேலை செய்யும் அனைவரும் முதல்நாளில் இந்த நபரின் திறமை கண்டு யார் இந்த நபர் என்று வித்தியாசமாக திரும்பி பார்த்தனர்.ஆனால் விதி சதி செய்தது.அந்த நபரால் அடுத்தடுத்த நாட்களில் முதல் நாளைப் போன்று அதிகபடியான மரங்களை வெட்ட முடியவில்லை.

அனைவரின் பார்வையிலும் கேள்விக்கு உள்ளானார். ஒவ்வொரு நாளும் முதலாளியும் மற்ற தொழிலாளிகளும் என்ன ஆச்சு முதல் நாள் நீங்கள் அத்தனை மரங்களை வெட்டினீர்கள். ஆனால் அடுத்தடுத்த நாட்களில் சரிவர வெட்டுவதில்லையே ஏன்.தினமும் நீங்கள் வெட்டும் மரங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறதே ஏன் என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் கடையின் முதலாளி அந்த நபரிடம் ஏன் உங்களால் அதிகமான மரங்களை வெட்ட முடியவில்லை என்று கேட்டார். முதல் நாள் மட்டும் அவ்வளவு மரங்களை வெட்டினீர்களே அது எப்படி என்று கேட்டார்.அதற்கு அந்த மரம் வெட்டும் நபர் அதுதான் எனக்கும் தெரியவில்லை.நான் முதல் நாளைப்போலத் தான் இப்பொழுதும் வெட்டிக்கொண்டிருக்கிறேன். நாள் முழுவதும் வெட்டிக்கொண்டு தான் இருக்கிறேன். ஆனால் முதல் நாளில் வெட்டியது போல் அதிக மரங்களை வெட்டுவதில்லை என்றான்.

ஆமாம் உங்கள் கோடாரி எங்கே அதை காட்டுங்கள் என்றார்.ஏன் என்று கேட்டான் அந்த மரம் வெட்டுபவன்.நீங்கள் அதை தினமும் எவ்வளவு நேரம் கூர்மை செய்கிறீர்கள் என்று கேட்டார் முதலாளி.கூர்மையா,நான் அதை ஒரு நாளும் பட்டை தீட்டியதே இல்லையே என்றான் மரம் வெட்டுபவன்.அப்பொழுது நான் முதல் கூர் தீட்டி கொடுத்தேனே அதோடு தான் இன்னும் வெட்டிக்கொண்டு இருக்கிறீர்களா என்றார்.ஆமாம் என்றான் மரம் வெட்டுபவன்.இது தான் உங்களுடைய பிரச்சினை நீங்கள் உங்களுடைய கோடாரியை கூர் தீட்டாமல் நாள் முழுவதும் வெட்டிக்கொண்டிருப்பதால் கோடாரி மட்டுப் பட்டு அதனால் அதிக மரங்களை வேகமாக வெட்ட முடியாமல் போகிறது.

எனவே நீங்கள் நாள் முழுவதும் கடினமாக உழைத்தும் பயனில்லாமல் போகிறது.இதை உணர்ந்த அந்த மரம் வெட்டுபவன் தினமும் கோடாரியை கூர்மைப்படுத்தினான்.

தற்போதைய வளர்ந்து போன நவீன உலகில் கடின உழைப்பு மட்டும் இருந்தால் யாராலும் முன்னேற முடியாது.கூடவே சிறிதளவு புத்திசாலித்தனமும் தேவை. கடின உழைப்பும் புத்திசாலித்தனமான செய்கையும் நம்மை உயர்த்தும்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# சளிக்கு சிகிச்சை பெறச் சென்ற சிறுமிக்கு நாய்க்கடி ஊசி போட்ட தாதியர்

(சென்னை)

சளி காரணமாக மருத்துவமனைக்கு சிகிச்சை பெற சென்ற சிறுமி ஒருவருக்கு நாய்க்கடி ஊசி போடப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் கடலூர் அரசு மருத்துவமனையில் இடம்பெற்றுள்ளது. அங்கு, சளிக்கு சிகிச்சை பெற சென்ற சாதனா என்ற சிறுமிக்கே தாதியர்கள் நாய்க்கடி ஊசியினை போட்டுள்ளனர்.

அதனால், சிறுமி திடீரென மயக்கமடைந்து விழுந்துள்ள நிலையில் அதற்கான சிகிச்சையும் பெற்று வருகின்றார்.

இது குறித்து தாதியர் மீது நடவடிக்கை எடுக்குமாறு சிறுமியின் தந்தை பொலிஸாரிடம் புகாரளித்துள்ளார்.

அந்த புகாரில் அவர், மகளிற்கு உடல்நிலை சரியில்லாமையால் சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் அங்கு பரிசோதித்த வைத்தியர் மகளுக்கு சளி பிரச்சினை உள்ளதாக கூறி ஊசி போடவும் மாத்திரைக்கும் சீட்டு எழுதி கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளார். அதையடுத்து, அந்த சீட்டை பெற்றுக் கொண்டு மாத்திரை வாங்கிய பின்னர் ஊசி போடும் இடத்திற்கு சென்ற நிலையில் அங்கிருந்தவர்கள் சீட்டை வாங்கி பார்க்காது மகளுக்கு 2 ஊசி போட்டதால் எதற்காக 2 ஊசி போடுகிறீர்கள் என்று தான் வினவியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு அவர், நாய் கடித்தால் 2 ஊசி தான் போட வேண்டும் என்று கூறியமையால் தனது மகளுக்கு சளி பிரச்சினை என்று தான் கூறிய வேளை தாதியர் மலுப்பலாக பதில் வழங்கியதாகவும் கூறியுள்ளார்.

அதற்கிடையில், தனது மகளிற்கு மயக்கம் ஏற்பட்டதால் உடனடியாக அவரை உள்நோயாளிகள் சிகிச்சை பிரிவில் சேர்த்துள்ளதாகவும் ஆகவே அலட்சியமாக சிகிச்சையளித்த தாதியர், பணியில் இருந்த வைத்தியர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளார்.(நி-5)

# ரஷ்யா



லிதுவேனியாவில் அடுத்த மாதம் 11ஆம் மற்றும் 12 ஆம் திகதி களில் நேட்டோ மாநாடு நடைபெற இருக்கிறது. நேட்டோ அமைப்பில் உள்ள தலைவர்கள் சந்திக்க இருக்கிறார்கள்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நேட்டோ தலைவர் ஸ்டோல்டன் பெர்க், நேட்டோ அமைப்பில் உள்ள 8 நாட்டு தலைவர்களை சந்தித்

# வெடித்துச் சிதறிய நீர்மூழ்கிக் கண்டுபிடிக்கப்பட்டது மனித எச்

## பகுப்பாய்வு செய்யவுள்ள மருத்து



(ஒட்டாவா)

டைட்டானிக் கப்பலினை பார்வையிடச் சென்று வெடித்துச் சிதறிய டைட்டன் நீர்மூழ்கிக் கப்பலின் இடிபாடுகளுக்குள் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது என்று அமெ

டைட்டானிக் கப்பலின் ஆய்வுக்காக வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலின் ஆழமான கடல் பரப்பிற்குள் சென்ற போது வெடித்து சிதறிய குறித்த கப்பலின் பாகங்கள் நேற்று. முன்தினம் கனடாவின் சென். ஜோன்ஸில் தரையிறக்கப்பட்டன.

கடலடியில் சுமார் 3,800 மீற்றர் ஆழத்தில் நடத்தப்பட்ட தேடல் பணிகளில் நீர்மூழ்கியின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

டைட்டானிக் கப்பலின் சிதைவுகளிலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் அவை இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கப்பல் பாகங்களில் விபத்தின் போது உயிரிழந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# ப் படைகளை குறைத்து மதிப்பிட வேண்டாம்

## நேட்டோ தலைவர் எச்சரிக்கை




(மொஸ்கோ)

**வாக்னர் ஆயுத கிளர்ச்சி முயற்சியால் ரஷ்யப் படைகளை குறைத்து மதிப்பிட வேண்டாம் என நேட்டோ தலைவர் ஸ்டோல்டன்பெர்க் தெரிவித்துள்ளார்.**

தார்.

அதன் போது அவர் தெரிவிக்கையில், "ரஷ்யாவில் ஆயுத கிளர்ச்சி ஏற்பட்டதால், அதன் இராணுவத்தை குறைத்து மதிப்பிட வேண்டாம். நேட்டோ மாநாடு நடைபெறும்போது ரஷ்யா மற்றும் அதன் ஆதரவு நாடான பெலாரஸ் படைகளை சமாளிக்கும் வகையில் எங்களுடைய தயார் நிலை அதிகப்படுத்தப்படும்.

எந்தவொரு சாத்தியக்கூறான அச்சுறுத்தலுக்கு எதிராக நேட்டோ அமைப்பில் உள்ள நாடுகளின் பாதுகாப்பு திறன் குறித்து தவறான புரிதலுக்கு இடமில்லை".

லிதுவேனியா கிடானாஸ் நவுஸ்தா "பெலாரசில் வாக்னர் படை குவிக்கப்பட்டால் அண்டை நாடுகளுக்கு அது மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருக் கும்" என்றார். அதற்கு "யெவ் ஜெனி பிரிகோசின் தலை மையிலான வாக்னர் படை பெலாரஸில் குவிக்கப்படுமா? அவர்கள் என்ன செய்வார்கள்? என்பது குறித்து பேசுவது முன்னதாகவே எடுக்கப்படும் முடிவாகும்" என்றார் ஸ்டோல்டென்பெர்க். சிறிய ஆயுத கிளர்ச்சி முறியடித்த நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புடின் தனது படையை விரிவுபடுத்த வாய்ப்புள்ள நிலையில் கிழக்குப் பகுதியில் தங்களது படைகளை வலுப்படுத்த வேண்டும் என்பதை நேட்டோ தலைவர்கள் ஒப்புக் கொண்டனர்.

ரஷ்யா உக்ரைன் மீது போர் தாக்குதல் தொடங்கியபோது, நேட்டோ ஸ்லோவாகியா, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரிய நாடுகளில் தங்களது படைகளை அதிகரித்தது என்பது குறிப்பிடத்தக்கது. தேவைப்பட்டால் லிதுவேனியர்வில் நிரந்தரமாக படைகளை நிறுத்த தயார் என ஜேர்மனி அறிவித்திருந்ததமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## க் கப்பலில்

## ச்சங்களா?

## துவர்கள்



ளில் உடல் பாகங்களும் காணப்பட்டதாக அதிகாரிகள் நம்புகின்றனர்.

அமெரிக்க மருத்துவ வல்லுநர்கள்,அனுமானிக்கப்படும் எச்சங்களை முறையான பகுப்பாய்வு செய்வார்கள் என்று கடலோர காவல்ப்படை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

(நி-5)

## திறந்த நீரில் முதல் சோதனைப் பயணம் செய்துள்ள உலகின் மிகப்பெரிய உல்லாசப் பணிகள் கப்பல்

பின்லாந்து நாடானது உலகின் மிகப்பெரிய உல்லாசப் பயணிகள் கப்பலின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்துள்ள நிலையில், கடல் சோதனைகளுக்காக திறந்த நீரில் முதல் பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2024 ஜனவரி மாதம் தனது முதல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ள றோயல் கரீபியன் இன்டர்நேஷனல் கடல்களின் ஜகான் என்ற இந்த கப்பலானது 365 மீற்றர்கள் நீளம் கொண்



டது. குறித்த கப்பலானது 250, 800 தொன் பாரம் தாங்கக் கூடியது என்பதுடன், உலகின் மிகப் பெரிய நீர்ப் பூங்காவையும் கொண்டுள்ளது.

இதில் 5610 பயணிகள் மற்றும் 2350 பணிக் குழுவுக்கும் பயணிக்க வசதி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது உலகில் இருக்கும் மிகப்பெரிய பயணிகள் கப்பல் வொன்டர் ஒப் தி சீ ஆகும்.

1188 மீற்றர் நீளம் கொண்ட இக்கப்பலானது கடந்த வருடம் தனது பயணத்தை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## முன்புற சக்கரம் இயங்காத நிலையில் தரையிறங்கிய பயணிகள் விமானம்

(வோஷிங்டன்)

முன்புற சக்கரம் இயங்காத நிலையில், பயணிகள் விமானமொன்று தரையிறங்கிய சம்பவம் அமெரிக்காவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

டெல்டா எயார்லைன்ஸ் க்குச் சொந்தமான பிளைட் 1092 விமானம் வட கரோலினா மாநிலத்திலுள்ள சார்லட் நகரின் சார்லட் டக்ளஸ் சர்வதேச விமான நிலையத்தில் இவ்வாறு தரையிறங்கியது.

அட்லாண்டா நகரிலிருந்து காலை 7.25 மணியளவில் புறப்பட்ட போயிங் 717, ரகத்தைச் சேர்ந்த இவ்விமானத்தில் 96 பயணிகள், 2 வி[illegible] மற்றும் 3 விமான[illegible] பெண்கள் என 104 பேர் இருந்தனர்.

எனினும் இச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்புற சக்கரத்தை கீழிறக்குவதற்கான கதவு திறக்கப்பட்டபோதிலும், சக்கரம் கீழிறங்கவில்லை.

இவ்விமானம் தரையிறங்கியபோது பயணிகள் மத்தியில் குழப்பநிலை எதுவும் ஏற்படவில்லை என பயணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விமானம் கீழே இறங்கும் போது ஒரு கடினமான தரையிறங்குலுக்கு தயாராகுமாறு தங்களுக்கு அறி[illegible] (நி-5)



## பறந்து சென்று பீட்சா விநியோகம் புது முயற்சியில் பிரித்தானிய நிறுவனம்

(லண்டன்)

உலகிலேயே முதன்முறையாக பிரித்தானியாவில் பறக்கும் இயந்திரம் ஜெட் பேக் அணிந்த மனிதன் மூலம் பீட்சா விநியோகம் செய்யும் சேவை அறிமுகமாகியுள்ளது.

இந்த சேவையை டோமினோஸ் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. பீட்சா விற்பனை செய்யும் நிறுவனங்கள் புதுப்[illegible] முயற்சியில் வாடிக்கையாளர்களுக்கு விரைந்து சேவை வழங்க முயன்று வருகின்றனர்.

இந்நிலையில், டோமினோஸ் நிறுவனம் ஒரு படி மேலே சென்று பறக்கும் இயந்திரம் அணிந்த ஜெட் பேக் மனிதனை கொண்டு வாடிக்கையாளர்களுக்கு பீட்சா விநியோகம் செய்யும் சேவையை அறிமுகம் செய்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரி உதவித்திட்டங்களில் முறைகேடு; வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

**அரசாங்கத்தின் நலன்புரி உதவித் திட்ட பதிவுகளில் முறைகேடு எனத் தெரிவித்து வவுனியா பெரியகட்டு கிராம சேவையாளர் அலுவலகம் முன்பாக மக்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் வவுனியா -மன்னார் பிரதான வீதியும் மக்களால் முடக்கப்பட்டது.**




நேற்று முன்தினம் காலை 9 மணி தொடக்கம் 10.30 மணி வரை சுமார் ஒன்றரை மணித்தியாலத்திற்கு மேலாக இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன், அவ்வீதியூடான போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

அரசாங்கத்தினால் நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர்ப்பட்டியல் அண்மையில் வெளிவந்திருந்த நிலையில் இரு நேரம் மட்டும் உணவை உட்கொண்டு வாழ்பவர்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள், முதியோர்கள், விதவைகள் உட்பட வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களின் பெயர்கள் உள்வாங்கப்படாமல் வசதியானவர்களுக்கே கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்து பெரியகட்டு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கணேசபுரம் கிராமத்தினை சேர்ந்த மக்களினால் இவ் கவனயீர்ப்பு வீதிமறியல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அவ்விடத்திற்கு வருகை தந்த பெரியகட்டு கிராம சேவையாளர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி மேல்முறையீடுகளை மேற்கொள்ளுமாறும் தன்னால் இயன்ற உதவிகளை தாம் செய்வதாகவும் தெரிவித்தமையினையடுத்து போராட்டம் கைவிடப்பட்டு பொதுமக்கள் வீதியினை விட்டு வெளியேறிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-250)

# கருங்கல் அகழ்வினால் கிணறுகளில் நீர் வற்றும் அபாயம்

## ஒட்டுசுட்டான் மக்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் கடந்த பல ஆண்டுகளாக இடம்பெறும் கருங்கல் அகழ்வு நடவடிக்கை காரணமாக அப்பகுதி மக்கள் பாரிய சூழல் பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கருங்கல் அகழ்வு, கிரவல் அகழ்வு, மணல் அகழ்வு மற்றும் காடழிப்பு என பல்வேறு வழிகளில் இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன.

அதன் அடிப்படையில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஒட்டுசுட்டான் பகுதியில் கடந்த பல ஆண்டுகளாக இடம்பெறும் கருங்கல் அகழ்வு நடவடிக்கையால் பாரிய சூழல் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக கருங்கல் அகழ்வினை மேற்கொள்ளும் இரண்டு நிறுவனங்கள் உரிய அனுமதிப்பத்திரம் இன்றி பாரிய அளவில் குழிகள் தோண்டி அகழ்வில் ஈடுபட்டு வருவதால் குறித்த அகழ்வு இடம்பெறும் பகுதிகள் விவசாய கிராமங்களாக இருப்பதனால் அப்பகுதியிலுள்ள கிணறுகளில் நீர் வற்றிப் போகின்ற நிலைமை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (நி-5-6)

# தம்பனை காட்டுப் பகுதியில் கத்திமுனையில் பணம், நகை கொள்ளை

(மன்னார்)

மன்னார் மடு இரண்டாம் கட்டைப் பகுதி ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரிடம் கத்தியை காட்டி பணம் மற்றும் நகை என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரண்டாம் கட்டைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஆராதனையை முடித்து விட்டு வரும் வழியிலே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சின்ன பண்டிவிரிச்சான் பகுதியூடாக பெரிய பண்டிவிரிச்சான் நோக்கி சென்ற வேளை தம்பனை காட்டுப் பகுதி வீதியில் இரு இளைஞர்கள் முகத்தினை துணியால் கட்டி மறைத்தவாறு வாள்களுடன் நின்று தங்களை மறித்து நகை, பணம் என்பவற்றை பறிமுதல் செய்ததாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (நி-5-6)

# சூட்சுமமான முறையில் கடத்தப்பட்ட முதிரைக்குற்றிகள் பொலிஸாரால் மீட்பு



(முறிகண்டி)

டிப்பர் வாகனம் ஒன்றில் சூட்சுமமாக மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட பெறுமதி வாய்ந்த முதிரைக் குற்றிகள் பளை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

முறிகண்டியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனத்தில் முதிரை மரக் குற்றிகள் கடத்தப்படுவதாக பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலிற்கமைவாக பளை நகரில் சோதனை மேற்கொண்ட பொலிஸார் குறித்த டிப்பர் வாகனத்திலிருந்து முதிரைக் குற்றிகளை மீட்டதுடன் வாகனத்தையும் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

மீட்கப்பட்ட 28 முதிரைக் குற்றிகளும் சுமார் 5 லட்சம் பெறுமதியானது எனவும் பொலிஸாரினால் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நிறைவுற்றதும் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்கு தொடரப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5-6-100)

# உதயநகர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்; இருவர் பொலிஸாரால் கைது

(முறிகண்டி)

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கிளிநொச்சி மாவட்ட குற்றபுலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சி உதயநகர் பகுதியில் வைத்து காரில் பயணித்தவர் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டது. குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவரையும் கிளிநொச்சி மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவினர் தேடி வந்த நிலையில் சந்தேகநபர்கள் இருவரும் நேற்று பகல் திருநகர் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த நபர்களிடமிருந்து குற்ற செயலுக்கு பயன்படுத்தப்பட்ட உள்ளூர் துப்பாக்கி மற்றும் மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரு தரப்புக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடே குறித்த குற்ற செயலுக்கு வலுச் சேர்த்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களையும், தடயப் பொருட்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5-6-100)



வவுனியா தவ்ஹீத் ஜும்மா பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட புனித ஹஜ்ஜுப் பெருநாள் திடல் தொழுகை பட்டாணிச்சூர் 5ம் ஒழுங்கை குடா வயல் திடலில் நேற்று காலை இடம்பெற்றது. இதில் பலரும் கலந்து கொண்டு தொழுகையில் ஈடுபட்டதுடன் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.

(படம்- வசந்தரூபன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 700 | 800 | 600 | 1000 |
| தக்காளி | 250 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 250 | 280 |
| கோவா | 300 | 290 | 300 | 300 |
| கரட் | 360 | 500 | 450 | 500 |
| பூசணி | 100 | 100 | 100 | 120 |
| புடோல் | 180 | 220 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 200 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 380 | 360 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 500 | 500 | 500 | 1000 |
| வெண்டக்காய் | 300 | 260 | 150 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 180 | 240 |
| பயற்றங்காய் | 600 | 650 | 500 | 350 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 450 | 400 | 350 | 400 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 550 | 700 | 600 | 700 |
| போஞ்சி | 530 | 550 | 550 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 160 | 220 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 100 | 80 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 90 | 100 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 260 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 420 | 500 | 400 | --- |
| முள்ளங்கி | 160 | 180 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 180 | 200 | 200 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# விஞ்ஞானத்தில் மெஞ்ஞானம்


ஞானம் என்பது அறிவை குறிப்பதாகும். அதாவது பகுத்தறிவையே விசேடமாக ஞானம் என குறிப்பர். உலகில் உள்ள ஜீவராசிகளில் மனிதன் மட்டுமே இவ்வாறான ஆறாம் அறிவு எனப்படும் பகுத்தறிவைக் கொண்டுள்ளான். இங்கு விஞ்ஞானம் என்பது அவன் தன்புலனுக்கு உட்படக் கூடிய வகையில் கண்டு,கேட்டு,உணர்ந்து,சுவைத்து,மணந்து அதாவது தனது ஐம்புலன்களாலும் உணர்ந்து அதைக் கொண்டு சிந்தித்து பகுத்தறிந்து தெளிவாக உணர்தலே விஞ்ஞானமாகும். உதாரணமாக ஓர் இரத்த மாதிரியில் நுண்ணங்கி இருப்பின் அவ்நுண்ணங்கியை நுணுக்குக்காட்டி ஊடாகப் பார்த்து அல்லது ஆய்வு கூடத்திற்கு அனுப்பி பல பரிசோதனைக்குட்படுத்தி உறுதி செய்த பின்னரே அதனை நுண்ணங்கித் தொற்று எனக் கூறுகிறோம். இதனையே விஞ்ஞானம் காட்டுகிறது.

இவ்வாறான விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து விண்ணிலும் மண்ணிலும் உள்ளேயும் வெளியேயும் பல வளர்ச்சி கண்டு நிற்கின்றது. அதனை வளர்ச்சிப் பாதையில் நோக்குவது போல் அழிவுப் பாதையிலும் பல பரிணாமங்களைக் கண்டு நிற்பது யாவரும் அறிந்ததே.

மெஞ்ஞானம் என்பது "உண்மையைப் பகுத்தறியும் அறிவு". ஆரம்ப காலத்தில் உயிர்கள் தானாகத் தோன்றுகின்றன என்ற எண்ணக்கரு இருந்து அது உண்மை என ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின் உயிர் உற்பத்திக் கோட்பாடு கண்டுபிடிப்பு முன்வைக்கப்பட்ட பின் அவை உயிர்பொருள் தோற்றம்,பின்னர் டாவின்சியின் பரிணாம வளர்ச்சி கோட்பாடு அதாவது ஒன்றில் இருந்து ஒன்று உருவானது எனக் கூறப்பட்டது.

மேலும் உலகம் தட்டை யானது என நம்பிய மனிதன் அன்று கலிலியோவின் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு,உலகம் உருண்டை என்றதை ஏற்க மறுத்தது.ஆனால் இப்பொழுது உலகம் உருண்டை என ஏற்றுக் கொண்டது இவ்வாறு பற்பல உதாரணங்கள் கூறலாம்.

இதற்கான காரணத்தை ஆராயுமிடத்து மனிதனின் ஐம்புலன்கள் ஓர் வரையறைக்குட்பட்டவை. கண்ணால் பிரித்தறியக் கூடியவலு 0.2 mm,பார்வைத்தெளிவு,பார்க்கக்கூடிய தூரம் என்பன மட்டுப்படுத்தப் பட்டே உள்ளது. அது போன்று காதால் கேட்கக்கூடிய ஒலி 20 – 20,000 HZ அளவு என மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனால் நாம் உண்மை என உறுதிப்படுத்த வேண்டிய ஒன்றை எமது புலனுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு கொண்டு வந்தே உண்மை என நிரூபிக்க முடியும் எனின் சில சமயங்களில் மெய்ஞானம் (உண்மை ஞானம்) விஞ்ஞானத்தையும் கடந்து நிற்பது போல் தோன்றுகிறது. இதற்கும் நிறைய உதாரணங்கள் கூற முடியும் இயற்கை அனர்த்தங்கள், covid -19 போன்ற தொற்று நோய்த் தாக்கங்கள் இதற்கான பற்பல விளக்கங்களை விஞ்ஞானம் கொடுத்தாலும் அதற்கான உறுதிப்பாட்டை தெளிவாக வரையறுக்கவில்லை. பிரபஞ்சத் தோற்றம் கூட Big bamp எனும் பெருவெடிப்பு மூலம் உருவானதென ஸ்ரீவன்றொக் கருத்தாடல்



கூறினும் அதற்கு முன் வேறுபட்ட கருத்துக்களே இருந்தன. மனிதனின் விஞ்ஞான ஆய்வில் மரணத்திற்கான காரணத்தைக் கூட சரியாக கூறமுடியவில்லை. எனவே இங்கு மெஞ்ஞானம் என்பது இன்னமும் விஞ்ஞானத்தால் தேடப்பட வேண்டிய ஒன்றாகவே உள்ளது.

ஆனால் விஞ்ஞானம் ஏன் அழிவுகளுக்கும்மனிதபிறழ்வுகளுக்கும் வழிவகுக்கின்றது எனும் நோக்குமிடத்து அதுவும் உண்மையைக் கண்டறியும் நோக்கம் இல்லாது நோக்கம் மாறுபடும் பொழுது அழிவுகளை ஏற்படுத்துகிறது. எனவே விஞ்ஞானம் என்பது **"மெஞ்ஞானத்தை நோக்கி ஓர் ஒழுக்க பிறழ்வின்றி நோக்கம் தவறாது"** அமைதல் முக்கியம் எனத் தெளிவாகிறது. நோக்கம் தவறாது எடுத்துக் கொண்ட விஞ்ஞான முயற்சிகளில் எதிர்பார்க்காத பல விளைவுகள் கூட மனிதனுக்கு மிகவும் பயனுள்ளத்தாக இருந்திருக்கின்றன.

ஆத்மீகவாதிகள் குறிப்பிடும் மெஞ்ஞானத்திற்கு அப்பால் யதார்த்தவாதிகளாகிய நாம் மெஞ்ஞானத்தை விஞ்ஞானத்தினூடாகக் காணுதல் சாலச்சிறந்ததெனின் நாம் இதனை எப்படி விளங்கிக் கொள்ள முடியும் எனப் பார்ப்போம்.

உண்மையைக் கண்டறியும் விஞ்ஞானத்தில் முதலாவதாக நோக்கம் சிறந்ததாக, உயர்ந்ததாக இருக்க வேண்டும். பின்னர் அதன் மேலுள்ள விருப்பம் மேம்பட வேண்டும். இதற்கு சிறுசிறு பயிற்சி மூலம் ஓர் சிறந்த பெறுபேறை பெற்றுத் திருப்தியடைந்து விருப்பத்தை ஏற்படுத்த வேண்டும். விஞ்ஞான மயமான இந்த உலகில் விஞ்ஞான பூர்வமாக சிந்திக்கும் ஆற்றல் செய்முறை, பயிற்சியினாலேயே ஏற்படமுடியும் இதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது விஞ்ஞான மேதைகளின் கூற்றுப்படி"விஞ்ஞான கற்றல் என்பது செய்முறை பயிற்சியூடாகவே அதனை விளங்கிக் கொள்ளமுடியும் மேலும் வளர்க்க முடியும்"என்பதே அவர்களது ஆதங்கமாகும். சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்பது போன்று பழக்கம் இன்றி எதுவும் உடனேவந்து விடாது அதுவும் விஞ்ஞானபூர்வமான சிந்தனை, செயல் என்பவற்றில் செய்முறை,பயிற்சி மிக முக்கியமாகும்.

எமது தேசத்தில் இளையதலைமுறையினரின் விஞ்ஞான செயற்பாடானது மிகவும் மந்தமாகவே காணப்படுவது யாவரும் அறிந்ததே. முதல்நிலைகல்வி, இரண்டாம் நிலைகல்விகளில் விஞ்ஞான செய்முறைப் பயிற்சியானது அறவே அற்றுப் போன ஒன்றாகவே காணப்படுகிறது. அனைவரும் செய்முறையைக் கற்பனையிலும்காணொளி மூலமும் கண்டு அதனைத் தவறாக விளங்கிக் கொள்ளும் சமுதாயமே இன்று வளர்ந்து வருகின்றது.

1980களிற்கு முன் பாடத்திட்டத்தில் "கண்கண்டதை கைசெய்யும்" என தமிழ்மொழிக் கல்வியில் கூட விஞ்ஞான எண்ணக்கரு பொதிந்திருந்தது. விஞ்ஞானம் உச்சக்கட்ட வளர்ச்சி கண்ட இந்தக் காலத்தில் கூட மாணவர்களிடம் சிறுசிறு விஞ்ஞான செயற்பாடுகளும் அற்று இருப்பதால் மாணவர்களின் சிந்தனை மட்டம் நலிவுற்று வருகிறது. இது இன்னமும் அவர்களின் விஞ்ஞான பூர்வமான அணுகு முறையை அற்றுப் போகச் செய்து விடும் அபாயம் காணப்படுகிறது. அதனால் சுயமாக சிந்திக்கும் ஆற்றல் அற்றுப் போய் காலப்போக்கில் பகுத்தறிவு அதாவது ஞானம் என்பது இல்லாது போய் விடும் வாய்ப்பும் உள்ளது. கண்கூடாக எமது சூழலில் 'பல மாணவர்கள் போதைக்கு அடிமையாகி மனநிலை பிறழ்வு ஏற்பட்டு மனிதனுக்குரிய பகுத்தறிவற்று இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலை தொடருமாயின் யதார்த்தவாதிகளாகவே நாம் மெய்யறிவை எட்ட இயலாத நிலை ஏற்படும். அப்படியாயின் நாம் எப்படி ஆத்மீகவாதிகளாக சரியான "மெய்யறிவை" எட்ட இயலும்.

சாதாரணமாக ஒரு துவிச்சக்கர வண்டி பயில வேண்டும் என்றாலே பயிற்சி சிறு வயதில் இருந்து தேவைப்படுகிறது. மூன்று சில்லு வண்டி, பின் மேலதிகமாக இரு சக்கரமுள்ள துவிச்சக்கரவண்டி என்பன ஓட்டியும் விழுந்தும் காயம் ஏற்பட்டு முயற்சி செய்தே தேர்ச்சி பெறுகிறோம். எமது பகுத்தறிவையே சவாலுக்கு உள்ளாக்கும், கேள்விக்குள்ளாக்கும் எமது இந்நிலைக்கு விஞ்ஞானபூர்வமான பயிற்சியை எப்போது வழங்கப் போகிறோம். ஒரு சிலர் வெற்றி கண்டுவிட்டால் நாம் எல்லோரும் வெற்றி கண்டதாக அர்த்தப்படாதல்லவா?

எமது கல்வித்திட்டத்தில் சிறு பகுதி மாணவர்களே உயர்தர விஞ்ஞானம் கற்கிறார்கள். அவர்கள் கூட இவ்வாறான நிலையில்தான் உள்ளனர் எனில் ஒட்டுமொத்த மாணவர் சமுதாயமும் விஞ்ஞானத்தை வெறுமனே கற்பனையிலேயே கற்று வருகிறது. ஆன்மிக நோக்கில் கூட எண்ணத்திற்கு செயல் வடிவம் இல்லாவிடில் அது அர்த்தமற்றதாகி விடுகின்றது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஞானிகள் கூட செயல் செய்யும்படியே புகட்டுகிறார்கள்.

அத்துடன் அவர்கள் எண்ணத்தை ஒருநிலைப்படுத்தி செயல் செய்யுமாறே புகட்டுகிறார் களே தவிர,சோம்பேறியாக கனவு மட்டும் காணும்படி எவரும் புகட்டவில்லை."மெய்ப்பொருள் காண்பது அறிவு" இங்கு அறிவு என்பது கூட மெய்ப்பொருளைக் காண்பதையே அறிவு என கூறப்பட்டு இருக்கிறது. எனவே விஞ்ஞானத்தை உண்மையைக் கண்டறிய எமது பகுத்தறிவைப் பயன்படுத்தி அதனூடாக செயல் செய்து, செய்யும் செயலிலே விளைவைக் கண்டு வியந்து இன் புற்று இருப்பதே விஞ்ஞானத்தில் அமிழ்ந்துள்ள மெஞ்ஞானமாகும்.

இதனைத் தெளிவுறப் புரிந்து நடந்தாலே மனித வாழ்வின் உண்மையான மெஞ்ஞானத்தைக் கண்டுணர்ந்து இன்புற முடியும் என பகிர விளைகின்றேன்.

**பொ.தை.ய.யசோதன்.**
**தொழில்நுட்ப உத்தியோகத்தர்,**
**தாவரவியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 217





"வேதாளத்துக்கு வாழ்க்கைப் பட்டு முருங்கை மரத்தில் ஏற மாட்டேன் என்றால், முடிகிற காரியமா? சோழ நாட்டுக்கு வந்த காரணத்தினால், நதி வெள்ளத்தில் முழுகிச் சுழலிலும் சிக்கும்படியாகி விட்டது! என்னோடு துணைக்கு வந்த ஒரு அசட்டுப் பிள்ளையின் பிடிவாதத்தினால் அப்படி நேர்ந்தது! கேளுங்கள், தேவி! அந்தப் பிள்ளை ஒரு சின்னஞ் சிறிய் பொய் சொல்ல முடியாது என்றான். அதனால் வந்த வினை"

"நீர் சொல்லுவது புதிராக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் நல்லது."

"சொல்கிறேன். தங்களுடைய அருமைச் சகோதரரின் ஓலையுடன் தூதனாக வந்த என்னைத் தஞ்சைக் கோட்டைத் தலைவர் சிறிய பழுவேட்டரையர் 'ஒற்றன்' என்று குற்றஞ்சாட்டிப் பிடித்து வர ஆட்களை ஏவினார். வந்த காரியம் பூர்த்தியாவதற்குள் சிறைப்பட நான் விரும்பவில்லை. ஆகையால் நான் தஞ்சையில் தங்கியிருந்த வீட்டுச் சிறுவனை வழிகாட்ட அழைத்துக் கொண்டு கிளம்பினேன்."

"தஞ்சை நகரில் யாருடைய வீட்டில் தங்கினீர்?"

"கோட்டைக்கு வெளியிலே பூக்காரப் பெண்மணி ஒருத்தியின் வீட்டில் தங்கினேன். அந்த அம்மாள் ஊமை."

"ஓகோ! அவளுடைய பெயர்?"

"அந்த அம்மாளின் பெயர் தெரியாது. ஆனால் அவளுடைய பிள்ளையின் பெயர் மட்டும் எனக்குத் தெரியும். அவன் பெயர் சேந்தன் அமுதன்.."

"நான் நினைத்தது சரிதான் மேலே சொல்லுங்கள்!"

"என் குதிரை மேல் அச்சிறுவனையும் ஏற்றிக் கொண்டு இந்தப் பழையாறை நகரை நோக்கி வந்து கொண்டிருந்தேன். அதற்குள் பழுவேட்டரையரின் ஆட்கள் சிலர் எங்களை நெருங்கி வந்து விட்டார்கள். நான் வந்த காரியம் முடிவதற்குள் அவர்களிடம் பிடிபட விரும்பவில்லை.

குடமுருட்டி ஆறு வந்ததும் அச்சிறுவனிடம், 'நான் இங்கே இறங்கிக் கொள்கிறேன், தம்பி! நீ பாட்டுக்குக் குதிரையை விட்டுக் கொண்டு போ! உன்னை நான்தான் என்று அவர்கள் தொடர்ந்து துரத்தி வருவார்கள். உன்னைப் பிடித்த பிறகு ஏமாறுவார்கள்! நான் எங்கே என்று அவர்கள் கேட்டால் ஆற்றில் விழுந்து முழுகிப் போய் விட்டதாகச் சொல்!" என்றேன். அந்தப் பையனோ அரிச்சந்திரனுடைய சந்ததியில் வந்தவன் போலிருக்கிறது. 'நீங்கள் முழுகாத போது எப்படி முழுகி விட்டதாகப் பொய் சொல்லுவேன்?' என்றான். அந்தப் பிள்ளை பொய் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படாமலிருக்கும் பொருட்டு, அவனைக் குதிரையில் சேர்த்துக் கட்டி விட்டு, நான் நதியில் குதித்து முழுகி விட்டேன். அம்மம்மா! இந்தச் சோழ நாட்டு நதிகளில், அதுவும் கரை ஓரங்களில், எப்பேர்ப்பட்ட நீர்ச் சுழல்கள்! அவற்றில் அகப்பட்டுக் கொண்டு நான் பெரிதும் திண்டாடிப் போனேன். கடைசியில், கரை ஓரத்தில் இருந்த மரத்தின் வேர் ஒன்றைப் பிடித்துக் கொண்டு கரையேறி உயிர் பிழைத்து வந்தேன். தேவி! நீர்ச் சுழலில் நான் அகப்பட்டுக் கொண்டு சுழன்று சுழன்று மதி மயங்கி மூச்சுத் திணறிக் கஷ்டப்பட்ட போது என்ன கண்டேன், எதை நினைத்துக் கொண்டேன் என்று எண்ணுகிறீர்கள்?'

"நான் எவ்விதம் அறிவேன்? ஒருவேளை கஜேந்திர மோட்சத்தை நினைத்துக் கொண்டிருக்கலாம்."

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நண்பர் கண்ட கனவு

(நேற்றைய தொடர்ச்சி...)

அப்போது அந்த மலையில் ஒரு குகையிலிருந்து பயங்கர ராட்சஸன் ஒருவன் உறுமிக் கொண்டிருப்பதை கண்ட என் நண்பர் பயந்து வந்த வழியே திரும்பி ஓடி மறுபடியும் நான்கு பாதைகள் கூடும் இடத்தை அடைந்தார்.



"இம் முறை அவர் நான்காவது பாதையில் சென்றார்.

அவர் கொஞ்ச தூரம் சென்றதும் தன் பின்னால் ராட்சஸன் வருவது கண்டு பயந்து வேகமாக ஓடினார். அவர் ஒரு பாறையின் விளிம்பை அடைந்து விட்டார். அங்கிருந்து போக வழியில்லை. பாறையின் கீழ் வெகு ஆழத்தில் தான் நிலப்பரப்பு தெரிந்தது அவர் ராட்சஸனுக்கு பயந்து நின்ற போது கால்கள் நடுங்க பாறையிலிருந்து தவறி கீழே படுபாதாளப் பள்ளத்தில் விழுந்து விட்டார். அமைச்சர் தம் நண்பர் கண்ட இந்தக் கனவைக் கூறி, "பார்த்தீர்களா எவ்வளவு பயங்கரமான கனவு என்று! இதய நோயாளியான என் நண்பர் இந்தக் கனவைக் கண்டு முடித்ததும் கண் விழித்தார். மறு வினாடியே அவரது இதயத் துடிப்பு நின்றது. அவர் இறந்து போய் விட்டார்." என்றார்.

அப்போது இருவரில் ஒருவர் பயந்து போய் [illegible] காட்சிகள் கூட மனிதனின் உடல் நலனை பாதிக்கின்றன. தங்களது நண்பர் நான்கு முறைகளில் பயந்து ஓடி இருக்கிறார். அந்தப் பயம் அவரைப் பெரிதும் பாதித்திருக்கிறது. கண் விழித்ததும் இதய நோயாளியான அவர் பயத்தால் இதயம் தாக்கப்பட்டு உயிரை இழந்திருக்க வேண்டும். உங்களது நண்பரின் பிரிவால் உங்களுக்குப் பெரும் துயரமே ஏற்பட்டுள்ளது," என்றான். அதைக் கேட்ட பின் அமைச்சர் மற்றவரை பார்க்கவே அவர் சிரித்தவாறே , "ஆகா ! என்ன அருமையான கட்டுக்கதை ," என்றான்.

அமைச்சரும், "கட்டுக் கதையா ? ஏன் அப்படிக் கூறுகிறாய்?" என்று சற்று கோபப்பட்டவர் போலக் கேட்டார்.

"தங்கள் நண்பர் இந்த பயங்கரக் கனவைக் கண்டதும் உடனே கண் விழித்தார், என்றும் மறு வினாடியே அவரது இதயத்துடிப்பு நிற்கவே, அவர் இறந்து விட்டார் என்று கூறினீர்கள். நீங்களோ உங்கள் நண்பரே இந்தக் கனவை உங்களிடம் கூறியதாகச் சொன்னீர்கள் அது எப்படி முடியும்? அவர் தான் கனவைக் கண்டு கண் விழித்ததும் இறந்து போய் விட்டாரே. அதனால் அவர் எப்படி இந்தக் கனவைத் தாமே உங்களிடம் சொல்லி இருக்க முடியும். முடியவே முடியாது.

அதனால் தான் இது கட்டுக் கதை என்றேன்" என்றான். அமைச்சர் இரண்டாவது நபரை பாராட்டி அவனையே மன்னனின் அந்தரங்க ஆலோசகனாகத் தேர்ந்தெடுத்தார்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுடையவர்கள் பெரும்பாலும் அந்த அறிவை ஏழைகளை நசுக்குவதிலும்,கொள்ளையிடுவதிலும் உபயோகப்படுத்துகிறார்கள் ! – பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்களைப் பீதியடைய வைக்கும் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு

கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்று நம் முன்னோர்கள் கூறிக் கொள்வர்.

இலங்கை வேந்தனாகிய இராவணன் சீதையைக் கவர்ந்து வந்து அசோகவனத்தில் சிறை வைத்ததன் பின்னர் அவனால் நிதானமாகச் செயற்பட முடியவில்லை.

சீதையை அடைந்துவிட வேண்டுமென்ற நினைப்பும் அதற்குச் சீதையின் எதிர்ப்புமாகச் சேர்ந்து, இராவணன் சிந்தை குலைந்து நின்றான்.

இதுதவிர, இராமசேனை இலங்கை மீது போர் தொடுத்தபோது, இராவண சேனை நிர்மூலமாகியது.

தம்பி கும்பகர்ணன் போருக்குப் போவதற்கு முன்பாக; அண்ணா! கற்புடைத் தேவியை விட்டு விடு என்று இரஞ்சுகின்றான்.

இருந்தும் அதனை இராவணன் பொருட்படுத்தினானல்லன்.

ஈற்றில் தம்பி கும்பகர்ணன், அன்புக்குரிய மகன் இந்திரஜித் ஆகியோர் போர்க்களத்தில் மாண்டுபோக, வெறுங்கையோடு போர்க்களத்தினின்று வெளியேறும் இராவணனின் மனநிலை எவ்வாறு இருந்ததோ அதனையே கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்று நம் முன்னோர்கள் குறித்துரைத்தனர்.

அந்நிலைமை இப்போது இலங்கை ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆம், உலகம் முழுவதும் பட்ட கடனைத் திரும்பிக் கொடுக்க வேண்டிய காலம் வந்தபோது, என்ன செய்வது ஏது செய்வதென்றறியாமல், அரசாங்கம் மலைத்து நிற்கிறது.

இங்குதான் உள்நாட்டுக் கடன் சீரமைப்பு என்ற கோதாவில் வங்கி வைப்புகள், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றில் உள்ள நிதிகளைப் பெற்றுக் கடன் சீரமைப்புச் செய்யலாமென்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

இதனை நடைமுறைப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தபோதிலும் அதற்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தவிர, வங்கிகளும் தமது எதிர்ப்பை முன் வைத்தன.

அதாவது வங்கிகளில் உள்ள நிலையான வைப்புகளில் கைவைத்தால், வங்கித் தொழில் பழுதுபட்டுவிடும். ஆகையால், வங்கிகளில் கைவைத்து நாட்டை முழுமையாகத் துவம்சம் செய்து விடாதீர்கள் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

இதன் காரணமாக, அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியாமல் போயிற்று.

இருந்தும் உள்நாட்டுக் கடன் சீரமைப்பு என்ற விடயம் வெளிப்பட்டபோது, நாட்டு மக்களில் ஒரு தரப்பினர் சிந்தை குலைந்து ஐயகோ! எங்கள் வங்கி இருப்புகளில் அரசாங்கம் கைவைத்து விடுமோ என்று ஏங்கி இடிவிழுந்து நிற்கின்றனர்.

ஆக, உள்நாட்டுக் கடன் சீரமைப்பு என்பது பலருக்கும் பதற்றத்தையும் பயத்தையும் கொடுத்துள்ளதென்பது மட்டும் நிச்சயமான உண்மை.

# அதிகரித்துவரும் போதைப்பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

### இந்துமத குருமார்கள் மைத்திரியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்போது வெகுவாக அதிகரித்துக் காணப்படுகின்ற போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு இந்து மத குருமார்கள் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை ஒன்றினை முன்வைத்துள்ளனர்.

இந்துமத குருமார்களுக்கும்-முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும்இடையிலான சந்திப்பொன்று நேற்று வியாழக்கிழமை காலை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் இடம்பெற்ற போதே இந்து மத குருமார்கள் மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பாக மதகுருமார்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அண்மைக் காலமாக எமது மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை வெகுவாக அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் பல சமூகப் பிரச்சனைகள் தோற்றம் பெறுவதுடன் அதற்கு அடிமையாகி இறப்பவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

போதையின் பிடியில் இருந்து எமது பிரதேசத்தை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர்கள் கோரியிருந்தனர்.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்துத் தெரிவிக்கையில் யாழ்ப்பாண மாவட்டம் மட்டுமல்லாது நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும்போதைப் பொருள்பாவனை அதிகரித்துக் காணப்படுகிறது. நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில்போதைப்பொருள் குற்றவாளிகள் நால்வரை இனங்கண்டு அவர்களுக்கு அதி உச்ச தண்டனை பெற்றுக் கொடுக்கவும் தயாராக இருந்தேன்.

எதிர்காலத்திலும் பாராளுமன்றத்தில் உரிய தரப்பினர்களுக்கு அழுத்தம் கொடுத்து இவ்வாறானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பேன் எனத் தெரிவித்தார். (4-6,30)

## இலங்கை விமானப்படைக்கு புதிய தளபதி நியமனம்

(கொழும்பு)

விமானப் படையின் புதிய தளபதியாக எயார் வைஸ் மார்சல் உதேனி ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கமைவான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால்நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கைளிக்கப்பட்டது.

இலங்கை விமானப் படையின் தற்போதைய பதவி நிலை பிரதானியான எயார் வைஸ் மார்சல் உதேனி ராஜபக்ஷவுக்கு இன்றுடன் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியினால்எயார் மார்ஷலாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

வைஸ்மார்சல்உதேனி ராஜபக்ஷ இந்நாட்டின் 19 வது விமானப்படைத் தளபதியாகவுள்ள நிலையில் அவர் கொழும்பு ஆனந்தா கல்லூரியின் மாணவர் என்ற வகையில் ஆனந்தா கல்லூரியில் உருவான முதலாவது விமானப் படைத்தளபதியாகவும் கருதப்படுகிறார். (4-7)

## வட்டுக்கோட்டை பேச்சி அம்மனின் வருடாந்த பொங்கல் உற்சவம்

வட்டுக்கோட்டை பேச்சி அம்பாள்தேவஸ்தான பொங்கல் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி விஷேட பூஜைகள் இடம்பெற்று மதியம் 12.00 மணியளவில் மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

தொடர்ந்து மாலை உற்சவசம்பந்தமான அனைத்து பூர்வாங்க கிரியைகளும் ஆரம்பமாகி ஆகம நெறிப்பிரகாரம் கொடியேற்றமும் அதனைத் தொடர்ந்து அம்பாளுக்கு விஷேட தூப தீப ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன.

உற்சவ நிறைவாக சமய சொற்பொழிவுகள், விஷேட தவில்,நாதஸ்வர கச்சேரிகள் என்பனவும் இடம்பெறவுள்ளது.

மேலும் உற்சவம் தனில் உடுக்கு வாத்தியத்துடன் பல விற்பன்னர்களால் "மாலைக்கு வாதாடிய மைந்தன்" காத்தவராயன் சிந்து நடைக் கூத்து பஜனைகளும்இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

### கே.கே.எஸ் சீமெந்து தொழிற்சாலையில்

## இரும்பு திருடிய இருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இரும்புகளை திருடிய குற்றச்சாட்டில் இருவரை நேற்று காங்கேசன்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடம் இருந்தும் சுமார் 2ஆயிரத்து.500 கிலோ இரும்பை மீட்டுள்ளதாகவும் கைதானவர்களில் ஒருவர் சீமெந்து தொழிற்சாலைக்கு அருகில் உள்ள நல்லிணக்க புரம் பகுதியை சேர்ந்தவர் எனவும் மற்றைய நபர் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்தவர் என்வும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை காங்கேசன்துறைசீமெந்து தொழிற்சாலைக்கு அருகில் உள்ள மாங்கொல்லை எனும் பிரதேசம் கடந்த 33 ஆண்டுகளாக இராணுவ கட்டுப்பாட்டினுள் இருந்த நிலையில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர்இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து வெளியேறி இருந்தனர்.

குறித்த பகுதி இன்னமும் காணி உரிமையாளர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படாத நிலையில் அப்பகுதிகளுக்குள் ஊடுருவும் இரும்பு திருடும் நபர்கள் வீடுகளை உடைத்தும் காணிகளுக்குள் காணப்படும் இரும்புகளை திருடியும் செல்கின்றனர்.

திருட்டு சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டும் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் தொடர்ந்தும் இரும்புகள் களவாடப்பட்டு வருவதுடன் அப்பகுதிக்கு அண்மித்த பகுதிகளில் மீள்குடியேறியுள்ள மக்கள் திருடர்களின் நடமாட்டத்தால் அச்சத்தில் உறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே பொலிஸார் அப்பகுதிகளில் சுற்றுக்காவல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு திருட்டு சம்பவங்களை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (4-7,33)

# விஸ்தரிக்கப்படும் அட்டைப் பண்ணைகளால் குடாக் கடல் சகதியாக மாறும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா கடல் பாரம்பரிய கடற்தொழிலில் இருந்து விலகி அட்டை பண்ணை தொழில் விஸ்தரிக்கப்படுவதால் இன்னும் பத்து வருடங்களில் குடாக் கடல் சேற்றுக் கடலாக மாறுவதை யாரும் தடுக்க முடியாது என சூழக வியலாளர் ... தெரிவித்துள்ளார்.

உலக வங்கியால் வெளியிடப்பட்ட கடல் அட்டை பண்ணை தொடர்பில் கடற்றொழில் சங்கங்களுக்கு விழிப்புணர்வு தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர்இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் குறிப்பாக ... கிளிநொச்சி முதவட்டங்களிலுள்ள ஆழம் குறைந்த கடற்கரைகளில் எவ்வித பரந்துபட்ட ஆய்வுகளும் திட்டமிடல்களும் இன்றி கடல் அட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது.

கடலட்டை பண்ணைகளால் கடல்வாழ் உணவுச் சங்கிலியில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ள நிலையில் இது கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மட்டுமல்ல ஒட்டுமொத்த உயிர்ப் பல்வகைமையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

வடக்கு மக்கள் மட்டுமின்றி இலங்கையில் வாழும் மக்கள் கடல் அட்டையை உணவுதேவைக்காக பயன்படுத்தாத நிலையில் டொலரைப் பெறப் போகிறோம் எனக்கூறி வெளிநாடுகளுக்கு எமது பாரம்பரிய கடல் வளத்தை விற்க முடியாது எனத் தெரிவித்தார். (நி-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

05

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இதன் காரணமாக, விஜயனையும், அவன் நண்பர்கள் 700 பேர்களையும் நாடு கடத்துகிறார் மன்னர். இவர்களை மூன்று கப்பல்களில் ஏற்றி, "எங்காவது போய் பிழைத்துக் கொள்ளுங்கள். இனியாவது திருந்தி வாழுங்கள்" என்று புத்திமதி கூறி அனுப்பி வைக்கிறார். மூன்று கப்பல்களும் இலங்கையை அடைகின்றன. இலங்கையின் கரையில் முதன்முதலில் தரையிறங்கிய விஜயனும் அவன் ஆட்களும் மணல் மீது கையூன்றி அமர்ந்த போது மணலின் சிவப்பு நிறம் அவர்களின் உள்ளங்கையில் ஒட்டிக்கொண்டது. தாமிரநிறமான கைகளை பார்த்த விஜயன் அந்த தளத்தை தாம்ரபரணி (தம்பபன்னி) என்று பெயரிட்டான். (தம்பன்னி எனும் பெயர் தாம்ரபரணி எனும் சமற்கிருதப் பெயரிலிருந்து வந்தது.)

### குவேனியின் ஒத்தாசையுடன் இயக்க இனஅழிப்பு.


குவேனி என்ற சொல், கவினி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு ஆகும். கவினி என்றால் "பேரழகு படைத்தவள்" என்று பொருள். இலங்கையை ஆண்ட ராவணன் ராட்சதன் என்று கூறப்பட்டது போல, குவேனியையும் ராட்சத குலம் என்று வர்ணிக்கிறது "மகாவம்சம்". விஜயனுக்கு அடைக்கலம் கொடுக்கிறாள் இயக்கர் தலைவியான குவேனி. இருவரும் காதல் வயப்பட்டு திருமணம் செய்து கொள்கிறார்கள். இவர்களது திருமணவிழா இயக்க மக்களது சிறிஸ்சவத்து நகரில் நிகழ்ந்தது. திருமணக் கொண்டாட்டத்திற்கென வந்திருந்த இயக்கர் அனைவரையும் குவேனியின் ஒத்தாசையுடன் விஜயனும் தோழர்களும் அழித்தொழித்தனர். குவேனி என்ற திராவிட மூதாதைப்பெண் தனது காதல் போதையால் செய்த தவறால் இயக்க மக்களின் ஒரு பகுதியினர் அழிந்தொழிய நேரிட்டது. விஜயனுக்கு குவேனியின் மூலம் ஜீவஹத்த, திகல்ல என ஒரு மகனும் மகளும் பிறந்திருந்தனர்.

### ஆரியக்குடி யேற்றங்கள் அமைக்கப்படுதல்

சிங்கபாகுவின் வழியில் தோன்றியதால் சிங்களா என்றே விஜயனும் அவனுடைய ஆட்களும் அறியப்பட்டனர். காலம் செல்ல செல்ல விஜயனின் ஆட்கள் தங்களுக்கென குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர். கதம்ப நதிக்கரையில் (அருவி ஆறு) அனுராதா என்றவன் அநுராதகமத்தை (அநுராதபுரம்) நிறுவினான். குரு உபதிஸ்ஸ உபதிஸ்ஸகம என்ற கிராமத்தை அமைத்துக்கொண்டனர். இவ்வாறே உருவேலகம, விஜிதகம, உஜ்ஜெனி ஆகிய சிறு நகரங்கள் தோன்றியது. நாட்டில் புதுக்குடியேற்றங்களை நிறுவிய அமைச்சர்கள் விஜயனை மன்னராக முடிசூட்டும்படி வேண்டிக்கொண்டனர்.

### முடிசூட தயாராகிய விஜயன்

ஆரிய மரபின்படி அரசகுலத்து பெண்ணை மணம்கொண்ட பின்னரே அரியணை ஏற இயலும். அதன் பிரகாரம் விஜயனுக்கும், விஜயனின் அமைச்சர்களுக்குமான மணப்பெண்களை பெற வேண்டி தென்தமிழ் நாட்டின் தலைநகரான மதுரைக்கு தூதுக்குழு ஒன்று புறப்பட்டது. விமர்சையான வரவேற்பை பெற்ற தூதுக்குழு பாண்டிய அரசனிடம் விஜயனுக்கான மணமகளை வேண்டினர். திருமண தொடர்புக்கு சம்மதம் தெரிவித்த மன்னர் தன் மகள் விஜயாவையும், அமைச்சர்ப் பெருமக்களின் பெண்களையும், இளவரசியுடன் இலங்கை செல்வதற்கு சம்மதம் கூறிய ஏனைய பெண்களையும், யானைகள், குதிரைகள், வாகனங்கள், பலவகை தொழிற்பிரிவை சேர்ந்த மக்கள் என பெரும் சீர்வரிசைகளையும் அனுப்பி வைத்தார். இவர்கள் ஈழத்தில் வந்திறங்கிய இடம் மாதித்த (மகாதிட்ட) எனப்பட்டது.



குவேனியின் அரண்மனை இருந்த இடம் - வில்பத்து , புத்தளம்

பாண்டிய இளவரசி தன்னை மணப்பதற்கு இசைந்து இலங்கைக்கு வந்து விட்டதை அறிந்து விஜயன் மிகவும் மகிழ்ச்சி அடைந்து, குவேனியை அழைத்து, "நான் பாண்டிய ராஜகுமாரியை மணக்கப் போகிறேன். இங்கிருந்து போய்விடு" என்று கூறுகிறான்.

இதனால் வேதனை அடைந்த குவேனி, பலமுறை தன்னுடைய நிலையை விளக்கியும் அதனை விஜயன் புரிந்துகொள்ளவில்லை என்பதால் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு தம்பபண்ணியில் இருந்து வெளியேறினாள் குவேனி. எனினும் அவள் இயக்கர்களுக்கு செய்த துரோகம் மனதில் ஒரு பயத்தை உருவாக்கிக்கொண்டு இருந்தது. தம்பபண்ணியில் இருந்து வெளியேறிய குவேனி யட்சர்களின் நகரான லங்காபுரத்தை அடைந்தாள். பிள்ளைகளை நகரெல்லையில் விட்டுவிட்டு தான் மட்டும் உள்ளே சென்றாள். அவளை கண்டதும் ஆத்திரமுற்ற இயக்கர்கள் அவ்ளை ஒற்றறிய வந்தவள் என சாடி கலவரத்தை உண்டாக்கினார்கள். அதில் தன்னுடைய சொந்த மக்களின் கைகளாலேயே வதைக்கப்பட்டு உயிரிழந்தாள்.

கலவரத்தை காண சகியாமல் வெளியே வந்த குவேனியின் மாமன், ஜீவஹத்த, திகல்ல இருவரையும் பார்த்து யாரென வினவினார். குவேனியின் குழந்தைகள் அவர்களென அறிந்ததும் அங்கிருந்து தப்புமாறு அறிவுறுத்தினார். தாயை இழந்த பிள்ளைகள் தங்கள் உயிரை காப்பாற்றிக்கொள்ள மலைநாட்டுக்கு தப்பிச்சென்றனர். அவர்களின் வழியே உண்டாகியவர்களே இலங்கையின் வேடர் இனத்தவர்கள் என்று கூறப்படுகிறது.

பாண்டிய ராஜகுமாரியை மணந்து கொண்ட விஜயன், அவளுடன் வந்த 700 பெண்களுக்கும் அமைச்சர்களாக உள்ள தன் நண்பர்களை அவரவர் தகுதிக்கு ஏற்ப மணம் முடித்து வைக்கிறான். 38 ஆண்டு காலம் இலங்கையை ஆண்டான். அவனது சந்ததிகளே சிங்களவர்கள்.

திருமணம் முடிந்த பிறகு விஜயன் இலங்கை தீவின் முதலாவது ஆரியமன்னனாக முடிசூடிக் கொண்டான். பழைய தீயவழிகளை எல்லாம் தவிர்த்து மக்களுக்கு உகந்த மன்னனாக ஆட்சிபுரிந்தான் என மகாவம்சம் தெரிவிக்கிறது. ஆனால் விஜயனுக்கு பாண்டிய பெண்ணின் மூலம் குழந்தைகள் எதுவும் உருவாக வில்லை. விஜயன் ஆட்சி கி.மு 543 தொடக்கம் கி.மு 505 (38 ஆண்டுகள்) வரையாகும்.

### குவேனி சாபம்

குவேனியை ஏமாற்றிவிட்டு வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டதால், ஆத்திரமடைந்த குவேனி சாபம் விடுகிறாள். இலங்கையில் சிங்கள சந்ததிகள் யாராலும் நிலையான அரியணையில் அமர முடியாது என்று சாபம் விடுகிறாள். இந்த காரணத்தினால் இன்று வரை இலங்கையில் அரசியல் ரீதியான பிரச்சினைகள் இருக்கின்றன.

### சாபத்தில் இருந்து மீள ஆலயம் கட்டிய சிங்களவர்கள்

இந்த சாபத்தை போக்க இளவரசர் விஜயன் - குவேனி ஆகியோரின் சிலைகள் அருகருகில் இருக்கும் வகையில் ஆலயம் ஒன்று 2014 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. மாத்தறை புகையிரத நிலைய வீதியில் உள்ள ஸ்ரீசுப்பிரமணியர் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்ட போது அந்த ஆலயத்தில் விஜயன் மற்றும் குவேனியின சிலைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இலங்கையில் சிங்களவர்கள் உருவாக காரணமான விஜயன் மற்றும் இயக்கர் குல வேடுவ பெண்ணான குவேனி ஆகியோருக்கான முதல் கோயில் இதுவாகும்.

(தொடரும்...)



மாத்தறையில் உள்ள ஸ்ரீ சுப்பிரமணியம் கோவிலில் இளவரசர் விஜய மற்றும் அரக்கி குவேனி ஆகியோரின் சிலைகளுக்கு வழிபாடு நடத்தும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச ஊழியர்...

யும் எதிர்பார்த்துள்ளார்.

அதன்படி, இந்த வருடத்தின் இறுதி காலாண்டுக்குள் வரவு செலவுத் திட்ட சமர்ப்பிப்புடன் சம்பளத்தை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், 15 இலட்ச அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் கடுமையான நிர்வாகத்துடன் செயல்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (4-7)

## யாழில் கோர...

யாழ்ப்பாணம் - அராலி, வட்டுக்கோட்டை வீதியில் கல்லுண்டாய் வெளிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை மதியம் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த, யாழ்.போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகஸ்தரான மகேஸ்வரன் மயூரன் (வயது - 37) மற்றும் அவருடன் பயணித்த வாகனங்கள் பழுது பார்க்கும் (மெக்கானிக்) அராலி மத்தியைச் சேர்ந்த ஜெயசுந்தரம் சரோஜன் (வயது-29) ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-7)

## மலேரியா...

யாழ்ப்பாணம் மற்றும் கல்முனைப் பிரதேசங்களில் மலேரியா நோய்க் கிருமியான Anopheles stephensi அடையாளம் காணப்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் ஜீவனி ஹரிஷ்சந்திர தெரிவித்துள்ளார்.

இந்த நுளம்புகளை ஒழிப்பதற்காக நாடு முழுவதும் பூச்சியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (4-7)

## புத்தூரில்...

ஞர்கள் இருவரின் வீடுகளுக்குள் நேற்று முன்தினம் புகுந்த 50 இற்கும் மேற்பட்டோர் இருவரையும் தாக்கியதுடன் பெறுமதியான பொருட்களையும் அடித்து சேதப்படுத்தியுள்ளனர்.

பெண்களின் ஒளிப்படங்களை கணினியில் கிராபிக் செய்து சமூக ஊடகங்களில் வெளியிட்டனர் என்ற அடிப்படையில் 21 வயது தொடக்கம் 25 வயதான இளைஞர்கள் இருவரின் வீடு மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

வன்முறை சம்பவம் தொடர்பிலான மேலும் பலரை கைது செய்ய அச்சுவேலி பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (4-7)

## மர்மமான...

வேலைக்கு வராத காரணத்தால் குறித்த இரு இளைஞர்களும் தங்கியிருந்த அறைக்குள் சென்று பார்த்த போது இருவரும் சடலமாக காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இளைஞர்களின் சடலத்தை தாயகம் கொண்டுவர உதவி செய்யுமாறு பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-7)

## ஊழியர்...

கிக் கட்டமைப்பின் மீது தொடர்ந்தும் சுமையை அதிகரிக்கப் போவதில்லை என்றும், வங்கிக் கணக்கு வைப்பாளர்களின் 57 மில்லியன் வங்கி கணக்குகளையும் பாதுகாப்பதை உறுதி செய்வதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் வங்கித் துறையில் சரிவு ஏற்பட்டால், மோசமான விளைவுகள் ஏற்படும் என்பதால் வங்கித் துறையைப் பாதுகாக்க வேண்டியது அத்தியாவசியமானது என்பதோடு, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கு பாராளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக் கொள்ளும் வரையில் பணப்புழக்கம் தொடர்பிலான ஊகங்களை தடுப்பதற்காகவே வெள்ளிக்கிழமை வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் மீது கைவைக்கும் எண்ணம் இல்லை என உறுதியளிக்கும் மத்திய வங்கி ஆளுநர், ஊழியர் சேமலாப நிதியத்திற்கு குறைந்தபட்சம் 9% வட்டி வீதத்தை உறுதிப்படுத்த முடியும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

மத்திய வங்கி என்ற வகையில் வங்கிக் கட்டமைப்பை பாதுகாப்பதையே முதன்மை நோக்கமாக கொண்டுள்ளது. கடந்த காலங்களில் வங்கிகள் முடங்கப் போவதாக போலி பிரசாரங்கள் பரவின. அதனால் வைப்புக்கள் இல்லாமல் போய்விடும் என்றும் கூறப்பட்டது. அதனால் பலரும் வைப்புக்களை மீளப் பெற முற்பட்டனர். வங்கிக் கணக்குகளை மீளப்பெற்றால் முழுப் பொருளாதாரமும் சரிவடையும்.

ஓய்வூதிய நிதியங்களை எடுத்துக் கொண்டால் 14%க்கும் குறைவான வரிக்கு உட்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் உள்ளிட்ட பல நிறுவனங்கள் உள்ளன. இவர்களிடத்திலுள்ள அனைத்து பிணை முறிகளையும் மீளப் பெற்றுக் கொண்டு அரசாங்கத்தினால் புதிய பிணை முறிகள் விநியோகிக்கப்படும்.

அவற்றுக்கு 2025 வரையில் 12% வட்டியும் கிடைக்கும். அதன் பின்னர் 9% வட்டி பெற்றுக் கொடுக்கப்படும். அதனால் ஊழியர் சேமலாப நிதியின் அளவு குறைக்கப்படாது. எதிர்காலத்தில் 9% வட்டி கிடைக்கும் என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்தும் எனத் தெரிவித்தார்.(4-7)

## முல்...

கொக்குத்தொடுவாய் மத்தி பகுதியில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரம் கொண்டு நிலத்தினை தோண்டியுள்ளார்கள்.

இதன் போது மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து கொக்கிளாய் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. இது பெண் போராளிகளின் தடயங்களாக காணப்படுகின்றது.

பச்சை சீருடை மற்றும் எலும்பு எச்சங்கள் என்பன இதன்போது இனம் காணப்படடுள்ளன. (4-7)

## 10...

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனகவக்கம்புர அறிவித்துள்ளார்.

இந்த ஊழியர்களில் தற்காலிக நியமனம் மற்றும் மாற்றுத் திறனாளிகளை நிரந்தர டங்குவதாகவும், இவர்களை நிரந்தர மாக்குவதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் இணங்கியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

## பட்டினியால்...

இருந்த காலத்தில் வேலை செய்யவில்லையென சில பேர் கூறுகின்றார்கள்.

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வடக்குக் கிழக்கில் ஜனாதிபதி செயலணி உருவாக்கி கோடிக்கணக்கான பணம் மூலம் அபிவிருத்தியை மேற்கொண்டேன். இச்செயலணிக்கான பணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாகவே வழங்கப்பட்டது

நீண்ட காலமாக இராணுவத்தால் அதியுயர்பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட காணிகளில் 98% காணிகளை மக்கள் பாவனைக்காக விடுவித்ததுடன் மீள் குடியேறிய மக்களுக்கு இந்தியாவின் உதவியுடன் வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் நடவடிக்கைகளையும் எடுத்தேன்

எது எவ்வாறாயினும் சில ஊடகங்களும் ஊடகவியளாளர்களும் என்னை பொய்யான தகவல்களை பயன்படுத்தி எழுதுகிறார்கள்.

இந்த நாட்டு மக்கள் அனைவரும் இலங்கையர்கள் என்ற நோக்குடன் ஒன்று சேர வேண்டும் எனக் குறிப்பிட்டார். (4-7)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 29/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1615
வெற்றி இலக்கங்கள்: மீனம் 4 3 1 3 1 4
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி -2023.06.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1190
ஆங்கில எழுத்து Z, வெற்றி இலக்கங்கள் 04 11 32 49
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2023.06.29, சீட்டிழுப்பு இலக்கம் 3402
ஆங்கில எழுத்து S, வெற்றி இலக்கங்கள் 05 49 51 75
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 29/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1508
வெற்றி எழுத்து W, சுப்பர் இலக்கம் 08, வெற்றி இலக்கங்கள் 11 28 47 49

### ஹந்தஹன (HANDAHANA)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.29
சீட்டிழுப்பு இலக்கம் 469
வெற்றி இலக்கங்கள்: மேஷம் 06 22 26 41 மேஷம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2023/06/29
சீட்டிழுப்பு இலக்கம் 5160
ஆங்கில எழுத்து V, வெற்றி இலக்கங்கள் 3 8 8 5 7 8
தேசிய லொத்தர் சபை

### கப்ருக (Kapruka)

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: K 18 27 34 63 69
சீட்டிழுப்பு வாரம் 1310, ஆரஞ்சு நிறம், 2023.06.29 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 341,879,973.80
DLB Development Lotteries

### Super Ball

சீட்டிழுப்பு வாரம் 2134, நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.06.29, தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: O 05 08 62 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,581,360/-
Web: www.dlb.lk

### சனிதா (Shanida)

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.29, வெற்றி வாரம்: 4295, வர்ணம்: சிவப்பு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,420,011.60
வெற்றி இலக்கங்கள் 12 31 37 52, ஆங்கில எழுத்து Y

### ராசி (Lucky)

சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 2,611,507/-
திகதி 2023-06-29, வெற்றி வாரம் 3846, வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 02 17 50 51
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,937,667/-

### சம்வர்த்தன வாசனாவ (அபிவிருத்தி அதிர்ஷ்டம்)

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 606, திகதி 2023-06-29, வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து M, வெற்றி இலக்கங்கள் 01 20 30, விதி எண் 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பரிசு ரூ. 21,223,208.00
DLB Development Lotteries, தொ.பே.: 0112 333 546/47, Web: www.dlb.lk

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 1960, வர்ணம்: இளம் நீலம், சீட்டிழுப்பு திகதி: 2023.06.29
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 54,513,188.20
வெற்றி இலக்கங்கள் 17 36 40 54, ஆங்கில எழுத்து M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அமைச்சர் விஜயகலா பயணித்த வாகனம் விபத்து

(புத்தளம்)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

புத்தளம் - கொழும்பு வீதியில் முந்தல், மங்கலேலிய பகுதியில் நேற்று காலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் முந்தல் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ஹலவத்த பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அவரது உடல்நிலை கவலைக் கிடமாக இல்லை என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

வாகன சாரதி மற்றும் அதில் பயணித்த மற்றுமொருவரும் சிறு காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாகனம் வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதிக்கு நித்திரை ஏற்பட்டமையினால் வாகனத்தின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (4-7)


## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் Lankan Tile Show Room இற்கு கீழ் குறிப்பிட்ட பணியாளர்கள் தேவை

- Show Room மனேஜர் சிங்களம்/ ஆங்கிலம் தெரிந்தவர் ஆண்
- விற்பனைப் பிரதிநிதி சீமெந்து ஆண்
- க/கு பதிவாளர் ஆண்/பெண்
- பணியாளர்கள்

தேவை. தங்களின் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமூகமளிக்கவும்.

குறிப்பு : 5 km சுற்றுளவு தூரத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

(C-6834)

குரு காட்வெயார்

இல.175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.

077 743 5265

## NEC - யாழ்நகர்

பெருமாள் கோவில் அருகாமை

A/L 2025

கலை & வர்த்தகம்

ஆரம்பம் : 01.07.2023

சனி காலை 8.00 மணி

(C-6842)

அலுவலக தொடர்பு : 076 535 0999

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16033)

T.P:077 544 8503

## KBK கணக்கீட்டு கல்லூரி

சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. | பலாலி வீதி, கந்தர்மடம்.

A/L 2025

(தமிழ்/ ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்)

இரு இடங்களிலும் அனுமதிகள் வழங்கப்படுகின்றன

ACCOUNTING

MR.K.BALAKAJEN SLTS

B.Com(jaf), H.N.Dip-in-Acc(ATI), Dip-in Edu (OUSL) M.Com(Hons), ACC.Spl

A/L 2023, A/L 2024 பிரிவுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (16050)

077 452 0043 (Whatsapp)

## NAVALAR

COLLEGE OF ARTS & COMMERCE

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி - யாழ்நகர்

A/L 2025

கலை & வர்த்தகம்

ஆரம்பம் : 01.07.2023

சனி காலை 8.00 மணி

(C-6842)

அலுவலக தொடர்பு : 076 535 0999

## அமெரிக்க லொத்தர் விசா

V2 TRAVELS

2022ம் ஆண்டு விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் வெளியாகி விட்டன.




அதிஸ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் அடுத்த கட்ட விசா நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன.

(C-6841)

0768226240 / 0768226241

## உடனடி வேலைவாய்ப்பு

சமையல் உதவியாளர்கள்

வல்வெட்டித்துறையில் இயங்கும் உணவகத்திற்கு தங்கியிருந்து சமையல் செய்யக்கூடியவர்கள் தேவை.




- முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

சம்பளம்: 50,000

(C-6841)

CIMS 49A, CHAPEL STREET, JAFFNA 777-068-777

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127

## Science Ocean

2023 Repeat

ஆரம்பம் July 03,10.00 am

INORGANIC

Mon-Fri - 10.00 am

CHEMISTRY : Ka.Subeesan (16122)

Brown Road, Jaffna.

076 236 3470, 077 430 7829

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாக்வும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16136)

076 826 0354, 076 057 0354

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 04 - 04 - 1936



மறைவு 02 - 06 - 2023

வைகாசி விசாகத்தன்று 02.06.2023 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது அன்புத் தாயார்

### அமரர் திருமதி பரமநாதன் ஈஸ்வரி

(காலஞ்சென்ற முன்னாள் வர்த்தகர் சி.பரமநாதன் அவர்களின் மனைவி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (30.06.2023) காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு 02.07.2023 ஞாயிற்றுக்கிழமை 12 மணியளவில் அவரின் பூர்வீக இல்லமான 7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்விற்கு உதவியவர்களுக்கும் அந் நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும் மேலும் அனைத்து வழிகளிலும் எமக்கு ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. (16120)

குடும்பத்தினர்

## சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி

கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடன் பட்டின் வகைகள், அழகுசாதனப் பொருட்கள், மாஸ் வகைகள், குடை வகைகள், கவரின் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள். இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர் :

தே. கலைத்தாசன் (கரன்)

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (கஸ்தூரியார் வீதி) யாழ்ப்பாணம்.

815 5900

(16136)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.